# கீதாசார்யன்-40

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்



தொகுதி 4 | துர்மதி௵ | தை மீ | ஜனவரி 82 | பகுதி 4



ஆசிரியர்:
M. A. வேங்கடகிருஷ்ணன், M.A., M.Phil.

**இயக்குநர் குழு :**

T. C. A. ராமானுஜம்
M.A. B.L., I.R.S. (தலைவர்)
N. கணபதி
விற்பனை இயக்குநர்
R. ரவிச்சந்திரன்
பொதுத்தொடர்பு இயக்குநர்
P. T ஸ்ரீனிவாசன்
நிர்வாக இயக்குநர்

**ஆலோசகர் குழு :**

சாண்டில்யன் (தலைவர்)
K. R. ஸ்ரீநிவாஸாசாரியர்
Dr. V. V. ராமானுஜம்
S. வேங்கடகிருஷ்ண
பட்டாச்சாரியர்
K. E. B. ரங்கராஜன்

7, தெற்குமாட வீதி,
திருவல்லிக்கேணி
சென்னை-600 005.

★

தனி இதழ் விலை
ஒரு ரூபாய்
வருடச்சந்தா 12/-

# திருமழிசை ஆழ்வார்

**கண்ணன்:** தாத்தா! நீங்கள் சொன்னபடியே நாங்கள் பல இடங்களில் நடந்த காலக்ஷேபத்திற்குச் சென்றிருந்தோம். ஆனால் எங்களுக்கு நடு நடுவே சொல்லும் சுலோகங்களுக்கு அர்த்தமே புரியவில்லை.

**தாத்தா:** நீங்கள் சிறுவர்கள் தானே. அதனால்தான் புரியவில்லை. 'புரியவில்லையே' என்று போகாமல் இருந்து விடாதீர்கள். மேன்மேலும் கேட்டுக் கொண்டேயிருந்தால், அதுவே உங்கள் மனதில் பதிந்து விடும்.

## பூமிகா

**நாராயணன்:** அப்படியே செய்கிறோம் தாத்தா. இன்று எங்களுக்கு என்ன கதை சொல்லப் போகிறீர்கள்?

**தாத்தா:** திருமழிசை ஆழ்வாரைப் பற்றிக் கூறுகிறேன் கேளுங்கள். இவர் ப்ருகு மஹரிஷிக்கும், கனகாங்கி என்ற தேவ மாதுக்கும் தை மாதம் மக நக்ஷத்திரத்தில் பிறந்தார். இவர் பிறக்கும் போது பிண்டமாக இருந்ததால், கனகாங்கி இவரை எறிந்து விட்டு தன்னுலகம் சென்று விட்டாள். அப்போது அங்கு வந்த திருவாளன் என்னும் பிரம்பறுப்பான் அக்குழந்தையை தான் வளர்ப்பதற்காக திருமழிசை எனும் ஊரிலுள்ள தன் வீட்டிற்கு எடுத்து வந்தான். ஆனால் அக்குழந்தையோ எம்பெருமானின் கடாக்ஷத்தாலே பசி தாகமின்றி இருந்தது.

**ஸ்ரீதேவி :** அப்படியா! அது எப்படி இருக்க முடியும் தாத்தா? ரொம்ப அதிசயமாக இருக்கிறதே.

**தாத்தா:** உன்னைப் போலவே, அந்த ஊரிலுள்ளோரும் அதிசயப்பட்டனர். இவர் இம்மாதிரி இருப்பதைக் கண்ட வயது மிகுந்த வேளாளன் ஒருவன் தன் மனைவியுடன் இவரைக் காணவந்தான். மேலும் தான் காய்ச்சிக் கொண்டு வந்த பாலை பருகும்படி வேண்டினான். ஆழ்வாரும் அவர்களுடைய பக்திக்கு இரங்கி அதனை அமுது செய்தருளினார் ஒருநாள் தான் குடித்து மிகுந்ததை அவர்களிடம் கொடுத்தார். அப்பாலின் மகிமையாலே அவர்களுடைய மூதுமை நீங்கியது. அதுமட்டுமில்லாமல் குழந்தையில்லாத அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு '**கணி கண்ணன்**' என்று பெயரிட்டு, ஆழ்வாருடைய சிடராகவே ஆக்கினர் அவர்கள்.

**கண்ணன் :** இந்த ஆழ்வார் சைவ சமயத்தை சார்ந்து '**சிவ வாக்கியர்**' என்ற பெயரோடு சைவராக வாழ்ந்தார் என்றும், பேயாழ்வார்தான் இவரைத் திருத்திப் பணி கொண்டார் என்றும் கீதாசார்யன் ஆண்டு மலரில் இருக்கிறதே தாத்தா. பேயாழ்வார் இவரை எப்படி திருத்திப் பணி கொண்டார்?

**தாத்தா :** பரவாயில்லையே அதற்குள் ஆண்டு மலரைப் படித்து முடித்து விட்டீர்களே! இவர் முழு முதற் கடவுளை அடைய விரும்பி பௌத்தம், சமணம் போன்ற பல சமயங்களைச் சார்ந்து அவற்றில் குறைபாடுகளைக் கண்டு அவற்றை விட்டு நீங்கினார். கடைசியில் சைவ சமயத்தைச் சார்ந்து நின்றார். இவரைப் பற்றிக் கேள்விப்பட்ட பேயாழ்வார் இவரைத் திருத்திப் பணி கொள்வதற்காக ஸ்ரீ வைஷ்ணவராக்குவதற்காக அவர் இருக்குமிடத்திற்கு அருகிலேயே தானும் ஒரு ஆசிரமத்தை அமைத்துக் கொண்டார்.

**நாராயணன் :** ஆசிரமத்தை அமைத்துக் கொண்டு, திருமழிசையாரைக் கூப்பிட்டு எம்பெருமானின் பெருமைகளைப் பற்றிக் கூறி அவரைத் திருத்திப் பணிகொண்டாரா தாத்தா?

**தாத்தா :** இல்லை இல்லை. அவர் தன்னுடைய ஆசிரமத்தின் அருகே ஒரு செடியைத் தலைகீழாக நட்டு, அறுந்த தாம்பில் ஓட்டைக் குடத்தைக் கட்டி, கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து செடிக்கு நீர் வார்க்கத் தொடங்கினார். இதைக் கண்ட திருமழிசையாழ்வார் பெரிதாகச் சிரித்து பேயாரை நோக்கி 'நீர் பித்தரோ! பேயரோ?' என்று வினவினார். அதற்கு பேயாழ்வார் 'நான் பித்தனென்றால் நீர் பெரும் பித்தரல்லவோ! இவ்வுலகைப் படைத்தருளும் முழுமுதற் கடவுள் ஸ்ரீமந் நாராயணனே என்று வேதங்களிலும், ஸ்ரீ ராமாயணம், மகாபாரதம் போன்ற இதிஹாசங்களிலும் கூறப்பட்டிருக்க, நீர் வேறு தெய்வங்களை நாடிச் செல்வது பெரும் பித்தர் செயலன்றோ!' என்று கூறினார். இதனால் இருவருக்குமிடையே வாதம் ஏற்பட, இறுதியில் பேயாழ்வார் நியாயங்களையும், வசனங்களையும் கூறி அவருக்கு உண்மையை உணர்த்தினார். மேலும் அவருக்கு பஞ்ச ஸம்ஸ்காரம் செய்து அவரைத் திருத்திப் பணி கொண்டார்.

**ஸ்ரீதேவி :** சைவராயிருந்து, வைணவராகத் திருத்திய பிறகு திருமழிசை ஆழ்வார் சிவபெருமானை நினைக்கவேயில்லையா தாத்தா?

**தாத்தா :** ஒரு நாள் அவர் திருமாலை சிந்தை செய்து கொண்டு தமது கந்தல் துணிகளை தைத்துக் கொண்டிருந்தார். அப்போது அவ்வழியாக ஆகாசமார்க்கமாக வந்த சிவபெருமானும் பார்வதியும் தம் மதத்தை ஒரு காலத்தில்

சார்ந்து நின்ற இவருக்கு ஏதேனும் வரம் அளிக்க வேண்டும் என்று எண்ணி அவரை அணுகினர். ஆனால் திருமழிசையாரோ அவர்களை ஏறெடுத்தும் பார்க்காமல் இருந்தார். உமாபதி 'உங்களை நாடி வந்தவர்களை உதாசீனம் செய்வது தகுமோ?' என்று கேட்க, அதற்கு அவர் 'உங்களால் எனக்கு ஆகக்கூடியது ஒன்றுமில்லையாதலால் உதாசீனமாய் இருந்தேன்' என்று கூறினார்.

**கண்ணன் :** கடைசியில் திருமழிசையாழ்வார் வரமே கேட்கவில்லையா தாத்தா?

**தாத்தா :** அவசரப்படாதே. அவர்கள் நிர்ப்பந்தப படுத்தியதன் காரணமாக திருமழிசையாழ்வாரும் 'எனக்கு மோக்ஷத்தை அருள வேணும்' என்று கூற, முக்கண்ணனோ அது நம்மால் இயலாது. அதை தரவல்லவன் ஸ்ரீமந் நாராயணனே, வேறு வரம் வேண்டுவாய்' என்று கூறினார். திருமழிசையாரும் 'எனக்கு நீண்ட ஆயுளையேனும் தர வேணும்' என வேண்ட, அதற்கு 'அது ஏற்கெனவே பிரம்மாவால் குறிக்கப்பட்டாயிற்று. அதை மாற்ற என்னால் இயலாது. வேறுவரம் வேண்டுவாய்' என்று கூறினார்.

**நாராயணன்:** கடைசியில் சிவபெருமான் என்ன வரம் தான் கொடுத்தார் தாத்தா?

**தாத்தா :** திருமழிசையாரும் ஏளனமாக 'இந்த ஊசியின் பின்னே நூல் வரச் செய்ய வேணும்' என்று வேண்டினார். இதனால் கோபம் கொண்ட சிவபெருமான் தன்னுடைய நெற்றிக் கண்ணைத் திறக்க உடனே திருமழிசையாரும் தன்னுடைய வலது திருவடியின் பெருவிரலில் உள்ள ஒரு கண்ணைத் திறந்தார். அதிலிருந்து ஏற்பட்ட நெருப்பு சிவபெருமானையே தகிக்க, அதிலிருந்து தப்புவதற்காக தன் சடையிலிருந்த மேகங்களை ஏவி, மழை ஏற்படச் செய்தார்.

அதனால் பெருத்த வெள்ளம் உண்டாயிற்று. அதைக் கண்டு சிறிதும் அசையாமல் அமர்ந்திருந்தார் திருமழிசையாழ்வார். அதைக் கண்ட சிவபெருமான் கோபம் தணிந்து அவருக்கு **'பக்திஸாரர்'** என்று பெயர் சூட்டி விட்டு கைலாயம் சேர்ந்தார்.

**ஸ்ரீதேவி :** கணிகண்ணன் ஆழ்வாருடைய சிஷ்யன் என்று சொன்னீர்களே தாத்தா? அவரைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே?

**தாத்தா :** திருமழிசை யாழ்வார் பெருமாளுக்குத் தொண்டு செய்து கொண்டு பல வருஷங்கள் கச்சித் திருவெஃகாவில் எழுந்தருளியிருந்தார். அப்போது கணி கண்ணனும் ஆழ்வாருக்கு பணிவிடை செய்து கொண்டு இருந்தார். கணி கண்ணனது கவி பாடும் திறமையைக் கேட்ட அவ்வூரரசன் தன்னை கவி பாடுமாறு வேண்டினான். ஆனால் அதற்கு கணிகண்ணன் 'ஸ்ரீமந் நாராயணனைத் தவிர, மானிடரைப் பாடேன்' என்று கூறினான். அரசன் அவனை மேலும் நிர்ப்பந்தப்படுத்த அதற்கு கணிகண்ணன் திரு வெஃகாவைப் பற்றிப் பாட, இதனால் கோபங்கொண்ட அரசன் 'என்னைப் பாடு என்றால் என் ராஜ்யத்திலுள்ளதைப் பற்றிப் பாடுகிறாயே' என்று கூறி கணிகண்ணனை நாட்டை விட்டு போகும்படி ஆணையிட்டான். கணிகண்ணன், ஆழ்வாரிடம் சென்று தான் நகரை விட்டு போகப் போவதாக கூறினான். ஆழ்வார் தானும் வருவதாகக் கூறி, பெருமாளிடம் சென்று,

**கணிகண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி**
**மணிவண்ணா நீ கிடக்க வேண்டா துணிவுடைய**
**செந்நாப் புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்**
**பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்.**

என்று வேண்ட, உடனே பெருமாளும் ஆழ்வாருடன் செல்ல மூவரும் ஒரு நாளிரவு ஊருக்கு வெளியே ஓரிடத்தில் தங்கினர். பெருமானே அவரை விட்டுச் சென்றதால் காஞ்சிபுரம் முழுவதும் ஒரே இருட்டாகவும், வாட்டமுற்றும் இருந்தது.

**கண்ணன் :** அச்சச்சோ! நிஜமாகவா? அப்படியானால் மன்னன் போய் அவர்களை அழைக்கவில்லையா தாத்தா?

**தாத்தா :** இருட்டைக் கண்டு கலங்கிய மன்னவனும், மந்திரிகளும் கணிகண்ணனிடம் வந்து மன்னிப்பு கேட்க, கணிகண்ணனும் ஆழ்வாரை ப்ரார்த்திக்க ஆழ்வாரும் பெருமாளை நோக்கி

**'கணி கண்ணன் போக்கொழிந்தான் காமரு பூங்கச்சி**
**மணி வண்ணா நீ கிடக்க வேண்டும்-துணிவுடைய**
**செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன்**
**பைந்நாகப் பாய் படுத்துக் கொள்.**

என்று வேண்டியவுடன், எம்பெருமானும் ஆழ்வாரோடும், கணிகண்ணனுடனும் புறப்பட்டுச் சென்றார். ஆழ்வார் சொன்னபடி தான் செய்ததை உலகெல்லாம் அறிவதற்காக, முன் போல் வலக்கையை கீழ்வைத்துக் கொண்டு படுக்காமல், இடக்கையை கீழ்வைத்துக் கொண்டு தலைமாடு கால்மடாக எழுந்தருளினார். ஆழ்வார் சொன்னபடி செய்ததால் "சொன்னவண்ணம் செய்த பெருமாள்" என்று தமிழிலும் 'யதோக்தகாரி' என்று வடமொழியிலும் அழைக்கப் பட்டார்.

**ஸ்ரீதேவி :** ஒரு சந்தேகம் தாத்தா. திருமழிசையாழ்வாரும், பெருமாளும் ஓரிக்கைக்கு எழுந்தளியிருக்கிறார் என்று சொல்கிறார்களே ஓரிக்கை என்றால் என்ன அர்த்தம் தாத்தா?

**தாத்தா :** பெருமாள், கணிகண்ணன், திருமழிசை ஆழ்வார் ஆகிய மூவரும் ஓர்இரவு தங்கியிருந்த இடம் ஓரி(ரவிரு)க்கை என்று வழங்கப்பட்டது. ஓரிரவிருக்கை என்பது மருவி ஓரிக்கை என்றாயிற்று.

**நாராயணன் :** இவர் நான்முகன் திருவந்தாதி மட்டும் தானே அருளியிருக்கிறார் தாத்தா?

**தாத்தா :** இவர் திருச்சந்த விருத்தமும் அருளிச் செய்து உலகுக்குத் தந்துள்ளார். மேலும் இவரைப் பற்றிய கதைகள் பல உள்ளன. இப்போது நாழியாகிவிட்டபடியாலே சந்தர்ப்பம் வரும்போது மறுபடியும் உங்களுக்குச் சொல்கிறேன். ஆங்! ஒன்று சொல்ல மறந்துவிட்டேனே! இவருக்கு 'உறையிலிடாதவர்' என்றொரு சிறப்புப் பெயரைச் சூட்டினர் ஆசாரியர்கள். அதாவது பிற சமயத்தினருக்கு எதிராக எப்போதும் உருவிய கத்தியோடு (உறையிலிடாமல்) இருப்பவர் என்று பொருள். ஸ்ரீமந் நாராயணனைத் தவிர வேறு தெய்வங்களைத் தொழக் கூடாது என்பதை அதிகமாக வலியுறுத்திருக்கிறார் இவ்வாழ்வார். அவர் அருளிச் செய்தபடியே நீங்களும் ஸ்ரீமந்நாராயணனை மட்டுமே தொழுது உயர்ந்த ஸ்ரீவைஷ்ணவர்களாக வாழ்ந்து பெரும் புகழும் பெறுவீர்களாக!

# ஸ்ரீபாஷ்ய ஸாரம்

## ஸ்ரீ பாஷ்ய மங்களச்லோகத்தின் பொருள் விளக்கம்

**அகிலபுவந ஜந்ம ஸ்தேம பங்காதிலீலே**
**விநத விவித பூதவ்ராத ரக்ஷைகதீக்ஷே**
**ச்ருதிசிரஸி விதீப்தே ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே**
**பவது மம பரஸ்மிந் சேமுஷீ பக்திரூபா.**

இந்த ச்லோகத்தினால் ஸ்ரீய: பதியான எம்பெருமான் பக்கலில் பக்திரூபாபந்நஜ்ஞானத்தை ஸ்ரீபாஷ்யகாரர் விரும்புவதாக மேலெழக் காணும் பொருள். இதிலுள்ள ஐந்து விசேஷணங்களாலும் நம்மாழ்வாருடைய பெருமைகளை விளக்கி, அவர் திறத்துப் பக்தியுண்டாம்படி ப்ரார்த்திப்பதாக உள்ளுறை பொருள். எம்பெருமான் ஸகல லோகங்களையும் படைத்தளித்துத்துடைப்பதை லீலையாக

ஸ்ரீ.உ.வே. மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

வுடையவன்; தன்னை வணங்கின வெவ்வேறு வகைப்பட்ட ப்ராணி ஸமூஹங்களுக்கு முக்தியளிப்பதாகிற ரக்ஷணத்தைச் செய்வதையே விரதமாகக் கொண்டவன்; "வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கு" என்று பெரியாழ்வார் அருளிச் செய்தபடி வேதாந்தங்களில் மிக விளங்குபவன்; ஸ்வரூபத்தாலும் திருக்குணங்களாலும் மிகப் பெரியவன்; திருமகள் கொழுநன்; இத்தகைய பெருமை வாய்ந்த பரம புருஷன் பக்கலில் மதிநலமுண்டாக வேணுமென்பது எம்பெருமான் பரமான பொருள். இத்தால் சாஸ்த்ரார்த்த ஸூசனமும் பண்ணினபடி.

[அகிலபுவந ஜந்ம ஸ்தேம பங்காதிலீலே] இந்த விசேஷணம் ஆழ்வார்க்கு ஆகும்போது இரண்டுபடியாக யோஜநையாகும். அகில புவனங்களினுடைய ஜன்மஸ்தேம பங்கங்களுக்கு [ஆதி] காரணபூதனான எம்பெருமானுடைய லீலாரஸம் அநுபவிப்பவர் ஆழ்வார். "அகில புவந ஜந்மஸ்தேம பங்காதாம் ய: ஆதி: (ஸர்வேச்வர:) தேந ஸஹ லீலா யஸ்ய தஸ்மிந்" என்று கொள்ளக் கடவது. திருவாய்மொழியில் (6-2) *என்னுடைய பந்துங்கழலும் தந்துபோகு நம்பீ* *விளையாடப் போதுமின்னென்னப் போந்தோமை* என்றிவை முதலான பலபல பாசுரங்களினால் ஆழ்வார்க்கும் எம்பெருமானுக்கும், நிகழ்கின்ற லீலைகள் வாசாமகோசரம். இதுவொரு யோஜனை; மற்றொரு யோஜனையாவது, அகிலம் — புவநஜந்மஸ்தேமபங்காதிலீலா: யஸ்ய—என்று கொண்டு, எம்பெருமானையே எல்லாமாகவுடையவர் ஆழ்வார்; (அதாவது) *உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணனெம்பெருமான்* என்றிருந்தவர் நம்மாழ்வார் என்றதாகிறது. இப்படியிருந்தவர் ஆழ்வாரொருவரேயாதலால் இந்த யோஜனையும் மிகப் பொருந்தும். இதுவே முக்கியமான யோஜனை.

(விநதவிவித பூதவ்ராத ரக்ஷைகதீக்ஷே) விநத விவித பூத வ்ராதரக்ஷகத்வம் எம்பெருமானுக்குச் சொல்லப்பட்டாலும் *அநதிக்ரமணீயம் ஹி சரணத்ரஹணம்* என்கிற நியாயத்தாலும் மந்த்ரரத்நப்ரக்ரியையாலும் அந்த ரக்ஷண பாரத்தை எம்பெருமானுடைய திருவடிகளே வஹிக்கும். அந்தத் திருவடிகளுக்கு ஸ்ரீ சடகோபனென்றும் ஸ்ரீ சடாரியென்றும் நம்மாழ்வாருடைய திருநாமமேயாயிற்று. ஆகவே இந்த விசேஷணம் நம்மாழ்வாரிடத்திலே மிக வெளிதாக அந்வயிக்கக் குறையில்லை. பாதுகாஸஹஸ்ரத்தில் ப்ரபாவபத்ததியில் (42) "ஜகதாம் அபிரக்ஷணே த்ரயாணாமதிகாரம் மணிபாதுகே வஹந்த்யோ:" என்ற ச்லோகம்

இங்குப் பொருத்தமாக அநுஸந்தேயம். இந்த விசேஷணத்தில் ஆழ்வார் விஷயமான யோஜனையில் விவரிக்கவேண்டிய விசேஷங்கள் பலவுண்டு; விஸ்தரபயத்தாலே விடுகின்றனன.

(ச்ருதி சிரஸி விதீப்தே) ச்ருதி சிரஸ்ஸாவது உபநிஷத்து; அதில் விசேஷேண தீப்தர் ஆழ்வார். எங்ஙனேயென்னில்; *தத்விப்ராஸோ விபந்யவோ ஜாக்ர்வாம்ஸஸ் ஸமிந்ததே* இத்யாதிகளான உபநிஷத் வாக்யங்கள் ஆழ்வாரையன்றோ ஓதுகின்றன. விப்ராஸ என்றது விப்ரா: என்றபடி. *ந சூத்ரா பகவத் பக்தா விப்ரா' பாகவதாஸ் ஸ்ம்ருதா: *என்கிறபடியே விப்ரத்வ ஸித்தி பெற்றவர் ஆழ்வார். (விபந்யவ:) *பண ஸ்துதௌ* என்கிற தாதுவிலிருந்து நிஷ்பந்நமான சொல்லாகையாலே விசேஷித்து ஸ்துதிகர்த்தாக்களென்றபடி. ''தெளிந்த சிறந்த திருமாற்குத் தக்க தெய்வக் கவிஞன், பாவிற் சிறந்த திருவாய்மொழி பகர் பண்டிதனே'' என்றபடி எம்பெருமானுக்குத்தகுந்த ஸ்தோதா ஆழ்வார். (ஜாக்ர்வாம்ஸ:) *கண்ணாரக்கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கு முண்டோ கண்கள் துஞ்சுதலே* என்று சொல்லி இந்நிலத்திலே உறக்கமற்றிருப்பவர் ஆழ்வாரே. 'ஸமிந்ததே' என்றவிடத்து (ஸம்) என்கிற உபஸர்க்கத்தை நோக்கியே இங்கும் (விதீப்தே) என்று ஸோபஸர்க்கமாக வருளிச் செய்தது.

இதற்கு மற்றொரு யோஜனையுமுண்டு; ச்ருத்யாம் சிரஸி தீப்த:, ச்ருதிசிரஸி விதீப்த: என்கிறதாகக் கொள்க. ச்ருதியென்றது திருவாய் மொழி; அதில் தீப்தர் ஆழ்வார்; பதிகந்தோறும் திகமை பாசுரத்திலே 'குருகூர்ச் சடகோபன்' என்று விளங்குபவரென்கை. இனி, ச்ருதி சிரஸ்ஸாவது கண்ணிநுண் சிறுத்தாம்பு திவ்யப்ரபந்தம், அது திருவாய்மொழியின் முடிவிலே நியமேந அநுஸந்திக்கப்

படுவதால் ச்ருதி சிரஸ்ஸாயிற்று. அதில் விசேஷேண நிப்தர் ஆழ்வார்; அந்த ப்ரபந்தம் முழுவதும் ஆழ்வார் விஷயமே யாதலால் அதில் விநிப்தரென்னக் குறையில்லையே,

[ப்ரஹ்மணி] "ஸர்வத்ர ப்ருஹத்த்வகுணயோகேந ஹி, ப்ரஹ்மசப்த:" என்ற ஸ்ரீ பாஷ்யத்தின்படி ப்ரஹ்மமென்றது மிகப் பெரிய வஸ்துவென்றபடி. ஆழ்வார் பெரிய திருவந்தாதியில் "புவியுமிருவிசும்பும் நின்னகத்த நீயென் செவியின் வழிபுகுந்து என்னுள்ளாய், அவிவின்றி யான் பெரியன், நீ பெரியை யென்பதனை யாரறிவார்" என்கிற பாசுரத்திலே—மிகப் பெரியவனான எம்பெருமானையும் தம்முள் ஒரு மூலையிலடக்கியிருக்கையாகிற பெருமை தமக்கேயுள்ளதென்று ஸோபபத்திகமாக நிரூபித்திருப்பதனால் ஆழ்வாரை ப்ரஹ்மமென்னத் தட்டில்லை. ஆழ்வார் தம்முடைய ப்ரஹ்மத்வத்தைத் தாமே உபபாதித்தருளி யிருப்பது விசேஷம். அப்பாசுரத்தின்படி எம்பெருமான் ப்ரஹ்மமாகவும் ஆழ்வார் பரப்ரஹ்மமாகவும் தேறுதலால் இங்கு 'பரஸ்மிந் ப்ரஹ்மணி' என்றது ஆழ்வார்க்கு மிகமிகப் பொருந்தும்.

(ஸ்ரீநிவாஸே) "ஸது நாகவர: ஸ்ரீமாந்" "அந்தரிக்ஷகத: ஸ்ரீமாந்" லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந: இத்யாதி ஸ்தலங்களில் பகவத் கைங்கர்யருசியும் பகவத் பக்தியுமே ஸ்ரீயாகச் சொல்லப்படுகையாலே அந்த ஸ்ரீயானது ஆழ்வார் பக்கலிலே குறையற்றதாகையாலே ஸ்ரீநிவாஸத்வம் ஆழ்வார்க்கும் அநபாயம். ஆக இப்படிப்பட்ட ஆழ்வாரிடத்திலே தமக்கு பக்தியை வேண்டினாராயிற்று.

மங்கள ச்லோக விவரணம் முற்றிற்று.

## 18 தேவர்கோன் சினமடைகிறான்

கோகுலத்திலுள்ள பெரியவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து ஆண்டு தோறும் இந்திரனை வழிபட்டு ஒரு பெரிய வேள்வி செய்வது வழக்கம். மழை பெய்வதற்காகவும், நாட்டில் பல் வகை வளங்களும் பெருகுவதற்காகவும் இந்த வேள்வி தொடர்ந்து செய்யப்பட்டு வந்தது. அந்த ஆண்டிலும் கோகுலத்தார் அவ்வேள்விக்கான முன்னேற்பாடுகளைச் செய்து விட்டுக் கண்ணனிடம் அதைப்பற்றிக் கலந்து கொண்டு போவதற்காக வந்தார்கள். கண்ணன் அவர்கள் கூறியதை எல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு ஏளனமாகச் சிரித்தான். முதலில் அவனுடைய சிரிப்பின் பொருள் அவர்களுக்கு விளங்கவில்லை. திகைத்தார்கள். கண்ணன் தன் பேச்சால் அவர்களுக்கு அதை விளங்கச் செய்தான். அவனிடம் வந்து அது பற்றிக் கூறியவர்களில் முன் நின்றவர் அவன் தந்தை நந்தகோபர்தான்.

''தந்தையே! நீங்கள் குறிப்பிடும் வேள்வியைப்பற்றி எனக்குச் சற்று விளக்கமாகக் கூறுங்கள்! யாருக்காக எந்தெந்தப் பொருள்களைக் கொண்டு நீங்கள் இந்த வேள்வியை இயற்றுவதாக இருக்கிறீர்கள்?'' என்று தன் தந்தையிடம் வினவினான் அவன்.

''மகனே! நீ மிக நல்ல கேள்வி கேட்டாய். அதன் காரணத்தை நீ கேட்டுத் தெரிந்து கொள்வது நல்லதுதான்.

இந்திரன் மேகங்களுக்கெல்லாம் தலைவனாக இருக்கிறான். அவன் அருளால்தான் உலகத்தில் வளம் நிறைந்து தோன்றுகிறது. வான் பொய்க்காமல் மழை பொழிகிறது. ஆகவே இந்திரனுக்கு நன்றி கூறும் விழாவாக இதை ஆண்டுக்கொரு முறை நாங்கள் கொண்டாடி வருகிறோம். நன்றி மறப்பது நன்றன்று. பயன் கொடுப்பவர்களுடைய பயனை எண்ணிப் பெருமை கொண்டு நன்றி செலுத்தாதவர்கள் தீவினையை அடைகிறார்கள் என்பது உனக்குத் தெரியாததன்றோ?" என்று மகனைச் சமாதானப்படுத்தும் முறையில் விடைகூறினார் நந்தகோபர். தந்தையின் விடையை மகன் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. அவருக்கே நியாய அபிப்ராயங்களை விளக்கி அறிவுரை கூறத் தலைப்பட்டு விட்டான் அவன்.

"என் அருமைத் தந்தையே! நீங்கள் உணராத அறங்களில்லை. வினைகள், அவற்றின் பயன், அவற்றால் விளையும் நன்மை தீமைகள் எல்லாவற்றைப் பற்றியும் நீங்கள் நன்கு அறிவீர்கள். மழை பெய்வதற்கும் பெய்யாமல் போவதற்கும் இந்திரன் காரணமல்லன். முக்குணங்களின் வயத்தராகி நெறியில் நின்றும் நெறி பிறழ்ந்தும் வாழும் மக்கள் தங்கள் வாழ்க்கை விளைவுகளை நினைவுகளாலும் செய்கைகளாலும் தாங்களே படைத்துக்கொண்டு போகின்றனர். இந்திரன் ஒரு பதவிக்குரிய ஒருவனே ஒழிய அவனுக்கெனத் தனிச் சிறப்பு எதுவுமில்லை. மலைத்தொடர்களும், வனங்களும், உயிர்க்குலங்களும் பசுமை நிறைந்த பூமியும் மழையை எண்ணி எதிர்பார்க்கின்றன. அதனால் மழை பெய்கிறது. மழை பெய்வதற்காக நீங்கள் யாருக்காவது நன்றியைச் செலுத்த வேண்டுமானால் மலைகளுக்கும் காடுகளுக்கும், பசுக்கள் முதலிய உயிரினங்களுக்கும், நல்வினைகளைத் தவறாமல் செய்து கொண்டிருக்கும் மாந்தருக்கும் நன்றி செலுத்த வேண்டும். இதை நீங்கள் நன்றாக நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

இந்திரனை வழிபடுவதற்குச் சேகரித்த பொருள்களைக் கொண்டு இயற்கையை வழிபடுங்கள்! புனலைப் பொழியும் நதி, மேகங்கள் தாங்கிப் படியும் மலைத் தொடர்கள், மழையை முழங்காட்டி அழைக்கும் பசுமைப் பரப்பான பூமி, எப்போதும், எதற்காகவும் தண்ணீரை நினைத்துத் தண்ணீருக்காகவே தவமிருந்து கொண்டிருக்கும் உழைத்து உயிர்க்குலம் இவைகளை வழிப்பட்டுப் பயனடையுங்கள். மலைகளும், அவற்றிலுள்ள தாவரப் பொருள்களும், உயிரினங்களும் இல்லையானால் உலகமே இல்லை. அதைப் புரிந்து கொண்டு இந்திரனை வழிபடும் எண்ணத்தை விட்டு இயற்கையை வழிபடும் எண்ணத்தை எண்ணுங்கள்''—என்று காரண காரியங்களை விளக்கித் தன் தந்தையிடம் விவரித்தான் கண்ணன். நந்தகோபர் அயர்ந்து போனார். கண்ணன் தன் பேச்சால் அவருடைய எண்ணத்தையே மாற்றிவிட்டான். நந்தகோபரும் அதற்கு இணங்கிவிட்டார். அவரும் கோகுலத்திலுள்ள மற்றவர்களும் சேர்ந்து கோவர்த்தன மலைச் சாரலை அடைந்து இயற்கை வழிபாடு புரிவதென்று ஏற்பாடுகளைச் செய்யத் தலைப்பட்டனர். பலருடைய வழிபாடுகளையும் போற்றுதல்களையும் ஏற்றுக் கொண்டு, இந்திரன் கர்வமும், இறுமாப்பும் அடையத் தொடங்கிவிட்டான். மூன்று உலகங்களையும் தானே தன் ஆணைக்குள், அடக்கிக் கொண்டிருப்பதாக எண்ணம் அவனுக்கு. இந்திரனுடைய இந்த விருப்பை ஒடுக்குவதற்காகவே அவனுக்குக் கிடைக்க இருந்த வழிபாட்டைத் தடுத்து நிறுத்தினான் கண்ணன். விழா தொடங்குவதற்கு முன்பே கோகுலத்து மக்கள் கோவர்த்தன மலைச்சாரலில் குழுமினர். பலநாட்களாக முயன்று இந்திர வழிபாட்டிற்கு சேகரித்து வைத்திருந்த எண்ணற்ற பொருள்கள் மலைச் சாரலில் குவிந்தன. அந்த மலையின் அழகும், வளமும் நிறைந்த தோற்றத்தைப் பார்க்கும் போது கண்ணனே அப்படி ஒரு மலையாக மாறிக் காட்சியளிக்கிறானோ என்று எண்ணத் தோன்றியது. அவனே கண்ணனாகவும் மலையாகவும், கண்ணன், மலை

என்ற இரண்டுமற்ற வேறொன்றாகவும் இருந்தானே என்னவோ?

அன்றிலிருந்து கோவர்த்தன மலைச்சாரலில் பலவிதமான இன்னிசைக் கருவிகள் முழங்கின. பாடல்களின் இனியகுரல் ஒலிகள் அந்த மலைச்சாரல் முழுதும் எதிரொலித்தன. அறுசுவை உண்டிகளின் நறுமணம் எங்கும் பரவிற்று. சோற்றுத் திரள் மலையின்மேல் மற்றும் பல வெண்ணிற மலைகள் உண்டாகிவிட்டதுபோல் தோன்றியது. உணவுக்காக நெய்யைக் காய்ச்சி உருக்கும் மணம் மலையின் சுற்றுப்புறம் முற்றிலும் மணந்தது. உரிய காலத்தில் ஒவ்வொரு நாளும் மலையை வழிபட்டார்கள். படைப்புப் பல படைத்தார்கள். மலைக்குச் செய்த வழிப்பாட்டுப் பயன் எல்லாம் மறைவாகக் கண்ணனையே வந்து அடைந்தன. மூலப்பரம் பொருள் ஆகிய அவனில் ஒரு பாகம்தான் அந்த மலை என்று கொள்வதிலும் மாறுபாடு இல்லை. அவன் மலையை வழிபடுபவர்களிலும் ஒருவனாக இருந்தான். யாருக்கும் தெரியாமல், தனக்குமட்டும் தெரிந்த விதத்தில் தானே மலையாகவும் இருந்து கொண்டிருந்தான். மலைக்கு அகில் புகை காட்டினார்கள். அந்த மண்ணில் உடல்படியும்படி விழுந்து வணங்கினார்கள். மனிதர்கள் மட்டுமின்றிக் கோகுலத்துப் பசுக்களும் கன்றுகளும்கூட, இந்த வழிபாட்டில் கலந்து கொண்டன. குறிப்பிட்ட விழா நாட்கள் முடிந்து வழிபாடு மங்கல நிறைவெய்தியபின் நந்தகோபர் முதலிய யாவரும் மறுபடியும் கோகுலத்திற்குத் திரும்பினர்.

ஆனால் அதே சமயத்தில் வானவர் கோநகரத்தில் இந்திரன் ஆத்திரத்தால் மனம் கொதித்துக் கொண்டிருந்தான். கோகுலத்தார் வழக்கமாகத் தனக்குச் செய்யவேண்டிய சிறப்பு வழிபாடு அந்த ஆண்டில் செய்யப்படாததைக் கண்டு அவன் உள்ளம் கனன்று கொண்டிருந்தது. கோகுலத்து ஆயர்கள் தனக்கு வழிபாடு செய்யாமல் தன்னை ஏமாற்றியது எக்கார

( தொடர்ச்சி 49ம் பக்கம் )

# ஸுதர்சனர் பதில்

## ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் (ஸுதர்சனர்), திருச்சி-17

**8) தத்வம் என்ருல் என்ன? அது எத்தனை வகைப் படும்?**

தத்வம் என்ருல் 'உண்மைப் பொருள்' என்று பொருள் படும். நமது விசிஷ்டாத்வைத மதத்தில் அதை சித், அசித், ஈச்வரன் என்று மூன்று வகையாக ஒப்புக் கொண்டிருக்கிருர்கள். அறிவுள்ளவர்களான ஜீவர்கள் அனைவரும் சித் (சேதனர்) என்னும் வகையைச் சேர்ந்தவர்கள். அறிவில்லாத பொருள்கள் அனைத்தும் அசித் (அசேதனம்) என்னும் வகையைச் சேர்ந்தவை. இவை இரண்டையும் நியமிக்கும் ஸ்ரீமத் நாராயணன் ஒருவனே ஈச்வரனுவான். இவன் அறிவுள்ளவர்களில் தலை சிறந்தவனுகையாலே பரம சேதனனுமாவான். நாராயணன், வாஸுதேவன், விஷ்ணு, ஹரி, அநந்தன் முதலான தனிப் பெரும் பெயர்களையுடைய இவன் ஒருவனே பரப்ரஹ்மமாவான். முற்கூறிய சேதநாசேதநங்களைக் குறிக்கும் எல்லாச் சொற்களுமே அவற்றுக்கு அந்தர்யாமியான இவன் வரையிலும் சொல்லக்கூடிய வல்லமையுடையவை. "வசஸாம் வாச்ய முத்தமம்" [ஜிதந்தே] [சொற்களுக்கு மேலான பொருளாயிருப்பவன்] "சொல்லினல் தொடர்ச்சி நீ" [திருச்சந்த விருத்தம்] என்னும் பிரமாணங்கள் இதையே காட்டுகின்றன. இந்த ஈச்வரன் எல்லையற்ற கல்யாண குணங்களையும், கணக்கும் எல்லையுமில்லாத உபய விபூதியையும் உடையவன். சித், அசித் என்னும் வகைகளில் ஒவ்வொன்றிலும் கணக்கற்ற பொருள்கள் அடங்கியிருக்கையால் தத்வங்கள் (உண்மைப்

பொருள்கள்) கணக்கற்றவை என்றும் சொல்லலாம். இப்படி விசிஷ்டமான (சேதநாசேதநங்கள் அனைத்தோடும் கூடிய) ப்ரஹ்மம் ஒன்றே என்று ஒப்புக் கொள்கையால் நமது மதம் விசிஷ்டாத்வைதம் எனப்படுகிறது.

**9) ஹிதம் என்றால் என்ன?**

சேதநனுக்கு எது நன்மையை அளிப்பதோ அது ஹிதமாகும். இதுவே உபாயம் என்றும், ப்ராபகம் என்றும் ஸாதனம் என்றும் கூறப்படுகிறது. நான்காவது கேள்வியின் பதிலைக் காண்க.

**10) தத்வ ஹித புருஷார்த்தங்கள் என்று மூன்று வகையாகப் பிரிப்பதற்கும், அர்த்த பஞ்சகம் என்று ஐந்து வகையாகப் பிரிப்பதற்கும் தொடர்பு உண்டா?**

தத்வ ஹித புருஷார்த்தங்களில் அர்த்த பஞ்சகமும் அடங்கியிருக்கின்றது. ஹிதம் என்பதே உபாயம். ப்ராப்யமான ப்ரஹ்மமும், ப்ராப்தாவான ஜீவனும் தத்வத்தில் அடங்கிவிடுகின்றார்கள். புருஷார்த்தமானது இஷ்டப்ராப்தி என்றும் அநிஷ்ட நிவ்ருத்தி என்றும் இரண்டு வகைப்படும். மூன்றாவது கேள்வியில் சொல்லப்பட்ட பலமாகிற கைங்கர்யமே இஷ்டம் (விரும்பத்தக்கது) எனப்படும். ஐந்தாவது கேள்வியில் விவரிக்கப்பட்ட விரோதியே அநிஷ்டம் (இஷ்டத்திற்குத் தடையாயிருப்பது) எனப்படும். இவ்வகையில் புருஷார்த்தத்தில் பலஸ்வரூபமும், விரோதிஸ்வரூபமும் அடங்கியிருக்கின்றன. இவ்வண்ணமாக அர்த்தபஞ்சமும் தத்வ ஹித புருஷார்த்தங்களில் அடங்கியுள்ளது.

**11) சேதனர்கள் எத்தனை வகைப்படுவர்?**

பத்தர், முக்தர் நித்யர் என்று மூவகைப்படுவர். ஸம்ஸார மண்டலத்தில் கட்டுண்டு கிடக்கும் நம்மைப் போன்ற

வர்கள் பத்தர் என்னும் வகையைச் சேர்ந்தவர்கள். அநாதி காலமாக ஸம்ஸாரத்தில் கட்டுண்டு கிடந்து, எம்பெருமான் அருளாலே ஒரு காலத்தில் முக்தியடைந்து (ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை அடைந்து) பரமபதமடைந்தவர்கள் முக்தர் என்னும் வகையைச் சேர்ந்தவர்கள். என்றுமே ஸம்ஸாரபந்தம் இல்லாதவர்களாய், எம்பெருமானுக்குப் பரமபதத்திலிருந்து தொண்டு புரியும் அநந்தன் (ஆதி சேஷன்), கருடன், விஷ்வக்ஸேனர் முதலானவர்கள் நித்யர் என்னும் வகையைச் சேர்ந்தவர்கள். பத்தர், முக்தர், நித்யர் என்னும் மூன்று வகையிலும் கணக்கற்றவர்கள் இருக்கிறார்கள்.

**12) அசேதனங்கள் எத்தனை வகைப்படும்?**

அசேதனங்கள் சுத்தஸத்வம், மிச்ரஸத்வமான பிரக்ருதி ப்ராக்ருதங்கள், ஸத்வசூந்யமான காலம் என்று மூன்று வகைப்படும். சுத்தஸத்வம் என்றும், நித்ய விபூதித்ரவ்யம் என்றும் சொல்லப்படுவது பரமபதத்தில் திருமாமணி மண்டபம், கொடியணி நெடுமதிள்கள், கோபுரங்கள், உத்யானவனங்கள் முதலானவையாகப் பரிணமித்து நிற்கும் அசேதனத்ரவ்யம். இது தானே ப்ரகாசிக்கும் சோதிமயமான அப்ராக்ருத த்ரவ்யமாகும். ஸம்ஸாரமண்டலத்திலுள்ள எல்லா அசேதனப்பொருள்களுக்கும் மூலமான மூல ப்ரக்ருதியும், அதிலிருந்து உண்டான கணக்கற்ற ப்ராக்ருதப் பொருள்களும் ஸத்வம் ரஜஸ் தமஸ் என்னும் முக்குணங்களை உடையவையாகையாலே மிச்ரஸத்வம் (ரஜஸ்தமஸ்ஸுக்களோடு கலந்த ஸத்வ குணமுடையன) எனப்படுகின்றன. இந்த முக்குணங்களும் இல்லாததும், வருஷம், மாஸம், நாள், நாழிகை, விநாடி முதலான பகுதிகளையுடையதுமான காலம் மூன்றாவது வகையான அசேதனப்பொருள். ரஜஸ் தமஸ்ஸுக்கள் இல்லாமல் ஸத்வ குணம் ஒன்றையே உடையதாகையால் நித்யவிபூதித்ரவ்யம்

சுத்தஸத்வம் என்றும், ரஜஸ் தமஸ்ஸுக்களோடு கலந்த ஸத்வகுணத்தை உடையதாகையால் ப்ரக்ருதி ப்ராக்ருதங்கள் மிச்ரஸத்வம் என்றும் (ரஜஸ் தமஸ்ஸுக்களோடு) ஸத்வ குணம் அடியோடு இல்லாதிருப்பதால் காலம் ஸத்வசூந்யம் என்றும் சொல்லப்படுகின்றன. காலத்தில் முக்குணங்களுமே இல்லையாகையால் 'த்ரிகுணசூந்யம்' என்றுமே அதைச் சொல்லலாம்.

**13) ஆகாரத்ரயம் என்றால் என்ன?**

ஸ்ரீமந்நாராயணன் ஒருவனுக்கே அடிமைப்பட்டிருக்கையாகிற அநந்யார்ஹசேஷத்வமும், எம்பெருமான் ஒருவனையே உபாயமாகக் கொண்டிருக்கையாகிற அநந்யசரணத்வமும், எம்பெருமான் ஒருவனையே அநுபவிக்கத்தக்க பொருளாக (அதாவது புருஷார்த்தமாக)க் கொண்டிருக்கையாகிற அநந்யபோக்யத்வமும் ஆகாரத்ரயம் எனப்படும். இவை மூன்றும் ஒவ்வொரு ஜீவனுக்கும் ஸ்வரூபமாகும் (ஸ்வரூபத்தை நிரூபித்துத் தரும் தன்மைகளாகும்).

**14. ஜடம் என்பது என்ன?**

வேறொன்றின் உதவியில்லாமல் தன்னைத் தானே காட்டாத பொருள் ஜடம் எனப்படும். அதாவது பிறிதொன்றாலேயே ப்ரகாசிப்பது ஜடமாகும். ப்ரக்ருதி ப்ராக்ருதங்களும், காலமும் ஜடத்ரவ்யங்களாகும்.

**15) ஜடமல்லாதவை (அஜடம்) என்பது என்ன? அவை எத்தனை வகைப்படும்?**

பிறிதொன்றின் உதவியில்லாமல் தானே ப்ரகாசிக்கும் த்ரவ்யம் அஜடம் எனப்படும். (1) ஈச்வரன், (2) ஜீவன (3) தர்மபூதஜ்ஞானம், (4) நித்ய விபூதித்ரவ்யம் என்னும் நான்கும் அஜடமாகும். இவற்றில் ஜீவனும், ஈச்வரனும்

தமக்குத்தாமே ப்ரகாசிக்கக் கூடியவையாகையால் ப்ரத்யக் என்னும் வகையைச் சேர்ந்தவர்கள். தர்ம பூதஜ்ஞானமும், நித்ய விபூதியும் தமக்குப் பிரகாசியாமல், ஜீவனுக்கோ ஈச்வரனுக்கோ தாமே பிரகாசிப்பவை யாகையால் பராக் என்னும் வகையைச் சேர்ந்தவை.

### 16) தர்மபூதஜ்ஞானம் என்றால் என்ன?

''நான் அறிகிறேன், என்னுடைய அறிவு'' என்னும் உலக வழக்குகளைக் காணும்போது அறிவுமயமான ஜீவர்களாகிற நமக்கு குணமாக (தர்மமாக) ஓர் அறிவு இருக்கிறது என்று விளங்குகிறது. **''நஹி விஜ்ஞாது: விஜ்ஞாதே: விபரிலோபோ வித்யதே''** (ப்ருஹதாரண்யகம் 6-3-30) [அறிபவனான ஜீவனுடைய அறிவுக்கு அழிவு இல்லையன்றோ] என்னும் உபநிஷத்வாக்யம் இவ்வறிவு அழியாமல் என்றும் இருப்பது என்றும் காட்டுகிறது. இதிலிருந்து, விளக்கு, சூரியன் முதலானவற்றுக்கு ஒளிபோலே ஜீவனுக்கு இவ்வறிவு அமைந்திருக்கிறது என விளங்குகிறது. இதுவே தர்ம பூதஜ்ஞானம் எனப்படும். பத்த ஜீவர்களுக்கு இவ்வுலகில் (ஸம்ஸார மண்டலத்தில்) இருக்கும் வரையில் அவர்களது கர்மத்தையொட்டி சுருக்கத்தையும் விரிவையும் அடைகிறது இவ்வறிவு. ''ஸ ஆநந்த்யாய கல்பதே'' [ச்வேதாச்வதரம் 5-9] அந்த ஜீவன் (அறிவினால்) எல்லையற்றவனாகிறான் என்னும் உபநிஷத் வாக்யம் இவ்வறிவு ஜீவனுக்கு முக்தி நிலையில் எங்கும் பரவி விடுகிறது என்று காட்டிற்று. ஈச்வரனுடைய தர்ம பூதஜ்ஞானம் அவனது ஸ்வரூபத்தைப் போலவே என்றும் எங்கும் பரவியிருக்கிறது.

---

**வாசகர்கள் கேட்க விரும்பும் கேள்விகளை சிதாசார்யனுக்கு எழுதியனுப்பினால் உடனடியாக ஸுதர்சனர் பதில் கிடைக்கும்.**

# "சும்மா"

## ( பொருளற்ற சொல்லா? )

"சும்மா" என்னும் சொல் பொருளற்ற சொல்லா? என்னும் கேள்வியை எழுப்பிக் கொண்டு, அதற்குரிய விடை கண்டு தெளிவு பெறுவோம்.

"சும்மா" என்னும் சொல் மக்களிடையே எங்ஙனம் வழங்கப்படுகிறது என்பதைக் காண்போம்.

ஒருவன் இடையீடின்றி சலசலவெனப் பேசிக் கொண்டே இருக்கிறான். மற்றொருவன் அவனை நோக்கி என் ஐயா இடையீடின்றி சலசலவென வீணாய்ப் பேசித் தொலைக்கிறீர், சற்று வாயை மூடிக்கொண்டு சும்மா இரும் என்கிறான்.

மதுரை செல்லப்பெருமாள் கோன்.

ஒருவன் பிறன் ஒருவன் செய்யும் காரியத்தைக் கண்டு அக்காட்சியை கண் கொண்டு காணச் சகிக்க முடியவில்லையே என்கிறான். அவனை நோக்கி மற்றொருவன், அதை ஏன் ஐயா நீர் பார்க்கிறீர், கண்ணை மூடிக்கொண்டு சும்மா இரும் என்கிறான்.

ஒருவன் இங்கு கமழும் துர்நாற்றத்தை நுகரச் சகிக்க முடியவில்லையே என்கிறான், அவனை நோக்கி மற்றொருவன் அதை ஏன் ஐயா நீர் நுகர்கிறீர், மூக்கை அடைத்துக் கொண்டு சும்மா இரும் என்கிறான்.

ஒருவன் பிறன் ஒருவன் பேசும் பேச்சைக் காது கொண்டு கேட்கச் சகிக்க முடியவில்லையே என்கிறான். அவனை நோக்கி மற்றொருவன், அதை ஏன் ஐயா காது கொடுத்துக் கேட்டுக் கொண்டு இருக்கிறீர், காதை அடைத்துக் கொண்டு சும்மா இரும் என்கிறான்

ஆக, மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளின் காரியமாகிய, ஸ்பரிசிப்பது, பேசுவது, காண்பது, நுகர்வது, கேட்பது ஆகிய காரியங்களை அதனதன் போக்குப்படி செயல்பட விட்டுவிடாது, தன் வயப்படுத்திக் குறித்த ஓர் நிலையில் நிறுத்தும் நிலையே ''சும்மா'' என்னும் சொல்லுக்குப் பொருளாகத் தெறுகிறது

இதை, 'சும்மா இருந்து சுகம் பெறுவது எக்காலம்'' என்று ஞானிகளும் பாடியருளியுள்ளனர் என்பதையும் காண்கிறோம்.

சும்மா இருந்து என்பது, ஐம்பொறிகளின் காரியத்தை ஸ்ரீமந் நாராயணனின் தண்தாமரைத் திருவடிகளின் கண் சென்று சேர்த்து அதன் கண் லயிக்குமாறு செய்து தியானிப்பதாகும்.

சுகம் பெறுவது என்பது—தியானத்தின் பயனாகிய வீடு பேற்றைப் பெறுவது என்பதாகும்

எக்காலம் என்பது,—தியானத்தின் இறுதி நிலையை எட்டி விட்ட அக்காலம் என்பதாகும்.

இதனை, ''பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்''. (திருக்குறள்)

அதாவது, மெய், வாய், கண், மூக்கு, செவி, ஆகிய ஐந்து பொறிகளையும் வழியாகக் கொண்டு எழும் அவா ஐந்தினையும் அறுத்து ஒழித்தவனாகிய ஸ்ரீமந் நாராயணனது மெய்யான ஸ்ரீ வைஷ்ணவ விசிஷ்டாத்வைத ஒழுக்க நெறியின் கண் வழுவாது நின்று ஒழுகித் திகழ்பவர்; ஸ்ரீமந் நாராயணனது பரமபதத்தின் ஆங்கே சென்று சேர்ந்து எக்காலத்தும் பிறப்பின்றி நித்திய சூரிகளாக இனிதே வாழ்ந்து திகழ்வர் என்று கூறியருளுகிறார் திருவள்ளுவப் பெருமான்.

ஆக, இக்கட்டுரையின் வாயிலாக, "சும்மா" என்னும் சொல் பொருட் செறிவுள்ள சொல்லே என்பதைக் கண்டு தேறினோம்.

அச் சொல்லின் சீரிய பொருளின் நெறி நின்றொழுகினால் அதன் பயனாக பரமபதம் சென்று சேர்ந்து ஸ்ரீமந்நாராயணனுடன் கலந்திருந்து எக்காலத்தும் பிறப்பின்றி நித்திய சூரிகளாக வாழ்ந்து திகழும் வீடுபேறு கிடைக்கப் பெறுவோம் என்பதையும் கண்டு தேறினோம். ★

Anything & Everything in
Real Estates
Buying & Selling Propreties
Civil Constructions
Please Contact

**MINERVA ENTERPRISES**
2, Narayanan Street,
Mahalingapuram,
Nungambakkam, MADRAS-600 034.

# ஆறுகால சிறுவண்டு

ஆழ்வார்கள் அருளிய திருப்பாடல்களில் ஆண் பேச்சு பெண் பேச்சு என இருவகையுண்டு; தாமான தன்மையில் பேசுவது ஆண் பேச்சு எனப்படும். பிராட்டியார் பாவனையில் பேசுவது பெண் பேச்சு எனப்படும். "ஜ்ஞாநத்தில் தம் பேச்சு; ப்ரேமத்தில் பெண் பேச்சு" என்ற ஆசார்ய ஹ்ருதய வாக்யத்தால் இதனையறிந்து கொள்ளலாம்.

இறைவனை உடையவன் என்றும், உயிர் என்றும், ஆட்கொள்ளுமவன் என்றும், புருடோத்தமன் என்றும் அறிகின்றவன், தன்னை உடைமையென்றும், உடம்பு என்றும், ஆட்செய்யுமவன் என்றும், பெண் என்றும் உணருவான்: அம்முறையில் எம்பெருமானைப் புருடோத்தமன் என்று கருதிய ஆழ்வார்கள் தங்களைப்

R. வேங்கடராமாநுஜன்

பிராட்டியாராக பாவிக்கலாயினர். அப்பொழுது பேசியவை யாவும் பிராட்டியார் பாசுரங்கள் எனப்படுகின்றன; தாங்கள் பிராட்டியாரைப் போலவே எம்பெருமானுக்கு அடிமை செய்ய விரும்பினார்கள்; அது இடைக்கப் பெருமையால் வருந்தினர்; அதனைப் பெறுவதற்காக அவனுக்கு உரியாரைக் கொண்டு உணர்த்தலாயினர்; அதுவே அவனுக்கு விடும் தூது எனப்படுகிறது.

அங்ஙனம் தூதுவிடும்பொழுது, திர்யக்ஜாதியானபக்ஷிகள், மற்றும் அறிவில் பொருள்கள் ஆகியவற்றைத் தூது

விடுகின்றார்கள். இது, தங்களுடைய கலக்கத்தின் மிகுநிலையைக் காட்டுதற்காகும். இவற்றிற்கெல்லாம் உட்பொருளுண்டு; இதனை ஆசார்ய ஹ்ருதயத்தில் காணலாம். எம்பெருமானிடம் சேர்விப்பவர்களான குருக்கள், உடன் பயின்றவர்கள், புத்ரர்கள், சிஷ்யர்கள் ஆகிற இவர்களைப் பக்ஷிகளாகக் கூறியுள்ளார்கள் என்கிறது ஆசார்ய ஹ்ருதயம். "சேர்ப்பாரைப் பக்ஷிகளாக்கி ஜ்ஞாந கர்மங்களைச் சிறகு என்று குரு ஸப்ரஹ்மசாரி புத்ர சிஷ்யஸ்தாநேபேசும்" என்ற வாக்யத்தால் இவ்வுண்மை புலப்படுகின்றது. இங்கே பட்டர் அருளிச் செய்யும் அரும்பெறல் திருமொழியொன்றை நினைவிற் கொள்ளுதல் வேண்டும்: "சக்ரவர்த்தித் திருமகன் திருவவதரித்த பின்பு வானரஜாதி வீறு பெற்றாற் போலே காணும் ஆழ்வார்கள் திருவவதரித்து திர்யக் ஜாதி வீறு பெற்றபடி" என்பாராம். திர்யக் ஜாதியென்பது இங்கே பக்ஷிகளின் இனத்தைக் குறிக்கின்றது. பெருமாளும் பிராட்டியாரும் ஒருவரையொருவர் நினைந்து வருந்தியிருக்கும் காலத்தில் அநுமான் வந்து முகங்காட்டித் தூது சென்று இருவரையும் சேர்த்து வைத்தான்; அதனால் அவ்வானர இனம் பெருமையைப் பெற்றது; அப்படியே ஆழ்வார்களையும் எம்பெருமானையும் சேர்த்து வைத்தன பக்ஷிகள்; அதனால் பக்ஷிகளின் இனமே வீறு பெற்றது என்று அருளிச் செய்துள்ளார்.

இவ்வாறு பக்ஷிகளைத் தூதுவிட்ட ஆழ்வார்களில் திருமங்கையாழ்வாரும் ஒருவர்; இவர்; தூவிரிய மலருழக்கி யென்னும் திருமொழியில் ஒரு வண்டைத் தூதாக வேண்டுகிறார்; "அணிமலர்மேல் மது நுகரும் அறுகால சிறுவண்டே!...வயலாலி மணவாளன் பணியறியேன்; நீ சென்றென் பயலைநோய் உரையாயே" என்று வேண்டுகின்றார். இங்கே "அறுகால சிறுவண்டே" என்று அருளியிருக்கிறார். ஆறு கால்களையுடைய சிறிய வண்டே என்பது

இதன் பொருள். பெரிய வண்டை விலக்குவதற்கு 'சிறு வண்டு' என்று விசேஷணமிட்டுக் கூறலாம். காரிய வாய்ப்புப் பெருத்து எம்பார் திருமேனி போல "வடிவு சிறுத்திரா நின்றதாயிற்று" என்ற வ்யாக்யானத்தையும் பார்த்துக் கொள்ளலாம். "அறுகால" என்ற விசேஷணம் எதற்கு? என்று தோன்றும்.

வண்டானது தேனையன்றி [வேறொன்றையுமுண்ணாது; மரக்கிளைகளிலுள்ள பூக்களில் ஸாரமான தேனை எடுக்கிறது; ஆறுபதங்களையுடைத்தாயிருக்கின்றது. இதனால் மதுவ்ரதம் என்றும் அறுபதம் என்றும் கூறப்படுகிறது. பதம் என்பது காலினைக் குறிக்கும். இதனோடு ஒத்திருப்பவன் இங்கு வண்டாகக் கூறப்படுகின்றான் என்று கொள்ளுதல் வேண்டும்; இவன் த்வயநிஷ்டனான ஆசார்யனாவன். இவன் "உளங் கனிந்திருக்கும் அடியவர் தங்கள் உள்ளத்துள்ளூறிய தேனை" என்கிற பகவத் விஷயமாகிற தேனையல்லது வேறொன்றைப் புஜியான். வேதஸாரம்: என்கிற த்வயமந்த்ரத்தையே தனக்கு இனியதாகக் கொள்ளுவான்; அதன் கண் உள்ள ஆறு பதங்களின் பொருளில் நிஷ்டையுடையனாவன். அதனால் த்வயநிஷ்டன் எனப்படுகின்றான்: இத்தன்மைகளையுடையவனான ஓர் ஆசார்யனையே ஆழ்வார் தூதாக வேண்டுகிறார் என்பது புலனாகிறது. இவனுடைய திருவடிகளே இறைவனைப் பெறுவதற்கு ஸாதனமாகும் என்பதை உணர்த்துவதற்காக "அறுகால சிறுவண்டே" என்று காலை விசேஷணமாக இட்டுக் கூறியருளினார் என்பது புலனாகிறது; இவ்விடத்திற்கும் பெரியவாச்சான்பிள்ளை அருளிய வ்யாக்யானமாவது—நித்யம் யதிய "சரணௌ சரணம் மதீயம்" என்ற ஸ்ரீஆளவந்தார் பாசுரத்தைக் காட்டி "சேர்ப்பார்களேயிறே இவர்கள் ஜீவனமாக நினைத்திருப்பது" என்று அருளியிருக்கிறார். ஸ்ரீஆளவந்தார் ஸ்ரீமந்நாதமுனிகள் திருவடிகளைத் தமக்குத் தஞ்சமாகப் பற்றினது போல,

ஆழ்வாரும் ஆசார்யன் திருவடிகளைத் தஞ்சமாகப் பற்று கிறார் என்பதைக் காட்டியுள்ளார். ''அறுகால'' என்பதற்குப் பொருளுரைக்குமிடத்து ''இரண்டு காலுடையாரைப் போலன்றிக்கே ஆறுகாலுடையாருக்குக் கடுகப் போய்க் காரியம் தலைக்காட்டலாமிறே''; என்ஜீவனம் கூடு பூரித்துக் கிடந்தபடியென்தான் என்கிறான்'' என்றும் அருளியிருக்கிறார். கூடுபூரித்தலாவது நிறைந்திருத்தல் என்பதாம். '' தேனார் கமலத்திருமாமகள் கொழுநன் தானே குருவாகி'' என்று கூறப்படுகிறுைதலால் ஸ்ரீமந்நாராயணனுடைய அதிஷ்டானம் பெற்ற ஆசார்யனுக்கு ஆறுகால்கள் உள்ளனவாகக் கொள்ளுதலும் பொருத்தமுடையதாகும்' இப்படி ஆசார்யன் திருவடிகளைத் தமக்கு உபாயமாக ஆழ்வார் பற்றினார் என்பதை இங்கே காணலாயிற்று.

மற்றும், திருநெடுந்தாண்டகம் 'தேமருவு பொழிலிடத்து'' என்னும் பாசுரத்திலும் ''அறுகால சிறுவண்டே தொழுதேனுன்னை'' என்று அருளியிருக்கிறார். இதுவும் தூது விடுவதைக் குறிக்கும் பாசுரமாகும். ''ஆமருவி நிரை மேய்த்த அமரர் கோமான் அணியழுந்தூர் நின்றானுக்கு இன்றே சென்று நீ மருவி அஞ்சாதே நின்று ஓர்மாது நின் நயந்தாள் என்று இறையே இயம்பிக் காண்'' என்று அருளியிருக்கிறார். இங்கே ''சென்று'' என்று பதமிருப்பதால் ''அறுகால'' என்பதற்குப் பொருளுரைக்குமிடத்தில் ''கால்களைக் கமந ஸாதனமாக—செல்கைக்கு உறுப்பாக அருளியிருக்கிறார் என்று பொருள் கொண்டனர் முன்னோர்; ''த்விபாத்தாயிருத்தல் சதுஷ்பாத்தாயிருத்தல் செய்கையன்றியே கமநஸாதனமான கால்கள் ஆறு உண்டாகப் பெற்றேன் என்கிறான்'' என்பது அவர்களுடைய வ்யாக்யானம். இதில் பொருட்சிறப்பு இல்லை என்பதை அறிந்த பட்டர், இடத்தை நோக்கிப் பொருள்கொண்டார். வண்டுக்குக் காகளேல் கமநஸாதனமாமென்பதில்லை. ''விகம் சிறகால் பறத்திர்''

( 34 பக்கம் பார்க்க )

# அன்புள்ள வாசகரே!

சென்ற இதழில் அறிவித்தபடி கீதாசார்யன் மூன்றுவது ஆண்டுமலர் ஸ்ரீ உ. வே. மஹா வித்வான் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமியால் வெளியிடப்பட்டது. 25—12—81 அன்று மாலை 6 மணிக்கு திருப்பாவை காலக்ஷேபத்தின் இடையில் மிகவும் எளிமையான முறையில் வெளியிடப்பட்டது. இம்மலரைப் பற்றி ஸ்ரீஸ்வாமி குறிப்பிட்ட போது – ''சமுத்திரத்தில் என்ன விசேஷம்? அதன் பெருமை என்ன? என்று ஒருவன் கேட்பானே யானால், சமுத்திரத்தின் பெருமையை வாயால் சொல்லி அவனுக்குப் புரிய வைக்க முடியாது. நேரே சமுத்திரத்தின் அருகில் அவனை அழைத்துச் சென்று சமுத்திரத்தை நேரில் காட்டியே அவனுக்கு அதன் பெருமையை உணர்த்த முடியும். அதுபோல கீதாசார்யன் ஆண்டு மலரில் என்ன விசேஷம் என்று கேட்பவர்களுக்கு, அதன் பெருமையை வாயால் சொல்லி புரியவைக்க முடியாது; அப்புத்தகத்தை வாங்கிப் பார்த்தாலே அதன் பெருமை தெரியும்''—என்று குறிப் பிட்டது சுவையாக இருந்தது.

ஆண்டு மலர் வெளியிட்டதிலிருந்தே உங்களில் பலர் நேரிலும், நண்பர்கள் மூலமாகவும் பெற்றுக் கொண்டு எங்களது சிரமத்தைப் பெருமளவு குறைத்து விட்டீர்கள். தபாலில்

பெறுபவர்கள், ஏற்கனவே அறிவித்தபடி V. P. P.யில் (தபால்காரரிடம் ரூபாய் இரண்டு கட்டி) புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளலாம் ஏற்கனவே பதிவு செய்து கொள்ளாதவர்கள் ரூபாய் இருபது செலுத்தி ஆண்டு மலரைப் பெற்றுக் கொள்ளலாம்.

மிகச் சிறந்த முறையில் காலண்டரும் தயாராகி விநியோகிக்கப்பட்டு வருகிறது. கூடிய வரையில் அலுவலகத்திற்கு நேரில் வந்து காலண்டரைப் பெற்றுக் கொள்வது நல்லது. (சிதாசார்யன் அலுவலக நேரம் 7 a.m. to 9 a.m.—6 p.m. to 8 p.m.) தபாலில் அனுப்பினால் தவறிவிடலாம். சுமார் 5 ரூபாய் விலையுள்ள காலண்டர் தபாலில் தவறிவிட்டால் மீண்டும் இன்னொரு காலண்டரை அனுப்புவது இயலாத காரியம். தபால் அலுவலக விதிப்படி காலண்டரை V. P. P. அனுப்பினால் குறைந்தபட்சக் கட்டணம் ரூபாய் மூன்று ஆகிறது. எனவே V. P. P.யில் ரூபாய் மூன்று கட்டி காலண்டரைப் பெற்றுக்கொள்ள விருப்பமுள்ளவர்கள் எங்களுக்குக் கடிதமெழுதினால் அவர்களுக்கு மட்டுமே காலண்டரைத் தபாலில் அனுப்புவோம். மற்றவர்கள் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆண்டு மலர், காலண்டர் பற்றிய உங்களது குறை நிறைகளை எங்களுக்கு எழுதியனுப்புங்கள். அடுத்தமுறை மேலும் சிறப்பாக அமைவதற்கான யோசனைகளையும் எழுதியனுப்புங்கள்.

( 31ம் பக்க தொடர்ச்சி )

என்று நம்மாழ்வார் அருளியிருப்பதால் செல்லுகைக்கு பிறகே அமையும். அதற்காக கால்களைக் கூறினார் என்று மதிலும் ''தொழுதேன்'' என்று பின்பு அருளியிருப்பதால்'' என்தலையிலே வைக்கைக்கு ஆறுகால் காலுண்டாகப் பெற்றேன் என்கிறான்'' என்று பணிப்பராம் இதனால் திருவடிகளை ப்ராப்யமாக...புருஷார்த்தமாகக் கொண்டார் என்பது பெறலாயிற்று. ஆசார்யனுடைய திருவடிகளே பலஸாதனமாகவும் ஸ்வயம் பலமாகவும் ஆகும் என்பதை ஆழ்வார் இந்த இரண்டு பாசுரங்களில் காட்டியுள்ளார் என்பது தெளிவாகும். ''வண்டேகரியான தெய்வவண்டோடே சேர்விக்கும் வண்டு'' ஆசார்யனாவான் என்பதை ஆசார்ய ஹ்ருதயத்தில் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் மிக விரிவாகக் காட்டியிருக்கிறார். அதனைச் சுருக்கிக் காட்டும் முறையில் இந்தக் கட்டுரை அமைந்துள்ளதாகும்.

## ஆயுள் சந்தா அளித்தவர்கள்

111. ஸ்ரீ சாரங்கராஜன், சென்னை-41.
112. ஸ்ரீ V. P. நரஸிம்மாசாரியர், காஞ்சீபுரம்.
113. ஸ்ரீ N. R. ராகவன், சென்னை-5.

( ஆயுள் சந்தா ரு. 250/- )

# ஸ்ரீமத் பகவத்கீதை

## இரண்டாம் அத்தியாயம்

**அவ்யக்தாதீநி பூதாநி வ்யக்தமத்யாநி பாரத!**
**அவ்யக்தநிதநாந்யேவ தத்ர கா பரிதேவநா ॥ (28)**

பரத குலத்திற் பிறந்தவனே! தேகங்கள் முன்பு புலப்படாத நிலையையுடையனவாயிருந்தன; நடுவில் புலப்படும் நிலையை யுடையனவாயிருக்கின்றன; பின்பு அழிந்து புலப்படாத நிலையை அடைவனவாம். இவ்வாறான தேகங்கள் விஷயத்தில் வருத்தம் யாது? என்பதாம். பூதாநி - தேகங்கள் வ்யக்தம்—புலப்படுவது.

பொருள்கள் நிலைவேறுபாடுகளை அடையும்போது சிறிது வருத்தம் தோன்றும்; குடம் உடைந்தால் அதைக் கண்டு சிறிது வருந்துவான்; அப்படியே மற்றைப் பொருள்களின் நாசத்திலும் வருந்துவான்; ஆனால் தேகத்தின் மாறுபாட்டில் சிறிதளவுகூட வருந்துவானில்லை என்கிறான் பகவான்.

விகாரப்பாடுடைய பொருள்களுக்கு விகாரம் ஏற்படுதல் இயல்பு; ஆகையால் முன்னிருந்த நிலையிலும் நடுவில் ஏற்படுகின்ற நிலையிலும் வருத்தமுண்டாவதில்லை; அவ்வாறே பின்னுண்டாகும் நிலையிலும் வருத்தமுண்டாவதற்கில்லை யென்பது கருத்து.

முன் சுலோகத்தில் விகாரங்கள் தவிர்க்கப்படாமை பற்றி வருந்துவதற்கில்லையென்றான்; இதில் விகாரங்கள் உண்டாகை அவற்றின் இயல்பு என்றும், முன்பின் நிலைகளில் இன்பு துன்புகள் அறியப்படாவென்றும் கூறி வருந்துதற்கு ஏதுவில்லையென்கிறான் என்பது விசேஷம்.

# அஹங்காரம்

"அஹம் க: கரணீயம் கிம்
பரிஹரணீயம் அபி கிம்
இதி ஸர்வம் ஜாநாஸி"

ஆசார்ய வள்ளல் ஸ்ரீ தேசிகன் உலகம் உய்ய அநேக க்ரந்தங்களை அருளிச் செய்திருக்கிறார். அதில் மேற்கூறிய ச்லோகம் ஸ்ரீ தேசிகப் பெருமான் ஸ்ரீ அச்யுத சதகத்தில் அருளிச் செய்தது. "நான் யார், நான் செய்யவேண்டியது என்ன, தவிர்க்கவேண்டியது என்ன என்ற அனைத்தையும் நீ அறிகின்றாய்" என்று பொருள்பட ஸ்ரீமந் நாராயணனைக் குறித்து திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். பிராட்டியாரால் "ஸர்வதந்த்ர ஸ்வதந்திரர்" என்று புகழ்ப்பட்ட ஸ்ரீ தேசிகப் பெருமான் "ஸ்வரூப ஸமர்ப்பணம்" என்றும்

R. பத்மநாபன் I. A. S.

உபாயத்தைக் கைக்கொண்டு, ஸர்வ வ்யாபியாய், ஸர்வ ஞானியாய் விளங்கும் ஸ்ரீமந் நாராயணன் அறியாமல் இப் புவியில் ஒரு துரும்பும் இயங்குவதற்கு ஸ்வய சக்தி இல்லை என்று கூறுகிறார். இந்த அநுஸந்தானத்தில் ஸ்வாமி தேசிகன் "ந்யாஸ தசக" த்தில் அருளியுள்ள, "நான்" என்னும் ஆத்மா எம்பெருமானுக்கு உரியவன் ஸ்வதந்த்ரனல்லன் என்கிற வியாக்யானத்தை இணைத்துப் படித்தால் பொருள் இலகுவாக புரிபடும்.

கவிதார்க்கிக ஸிம்ஹமான ஸ்ரீதேசிகப் பெருமான், பிராட்டியாரால் "ஸர்தந்த்ர ஸ்வதந்த்ரர்" என்றெல்லாம் வர்ணிக்கப்பட்டவர் 'அஹம் என்னும் ஆத்ம ஸ்வரூபத்தை வர்ஜித்து எம்பெருமானை சரணடைகின்ற உபாயத்தை உலகிற்கு எடுத்துரைப்பது ஒரு புறமிருக்க, சாதாரண வாழ்க்கையில் நடப்பது என்ன? கேவலம் சேதநர்களான நாம் எம்பெருமானின் அருள் இல்லாவிடில் அருளற்றவர்களால் (தவ அப்ரஸாதே அப்ரஸந்நா:) போய் விடுவோம் என்ற கருத்தை மனதில் கொள்ளாமல், ஆங்கிலத்தில்

சொல்வது போல ஒருவித ஈகோயிஸத்தை (Egoism) வளர்த்துக்கொண்டு "நான்தான் செய்தேன்" "என்னால்தான் முடிந்தது" என்றெல்லாம் மார்தட்டி பேசி, ஸ்ரீ தேசிகப் பெருமான் 'அவலேபான் அப்ரபூதான்' என்று குறிப்பிடும் செருக்கு கொண்ட அற்பர்களாக இப்புவியில் திரிகிறோம். தூய ஸ்ரீ வைஷ்ணவன் யார் என்றால் இப்புவி வாழ்க்கை அநித்யம் என்றும் எம்பெருமானுடைய திருவடியை அடைந்து நித்ய ஸூரித்வத்தை அடைவதே ஜீவ லக்ஷ்யம் என்றும் எவன் ஒருவன் நினைத்து செயல்படுகின்றானோ அவன் தான் அத்தகுநிலையை அடைகிறவன் என்பதை உணர வேண்டும். இதற்கு அத்யாவசியமான தேவை 'ஸ்வரூப ஸமர்ப்பணம்' என்று ஸ்ரீ தேசிகப் பெருமான் கூறியிருக்கும் படியான 'அஹம்' என்னும் பாவத்தை விடுத்து எம்பெருமானின் ப்ரபத்தியை நாடுவது தான் என்பதை ஒவ்வொரு ஸ்ரீ வைஷ்ணவனும் உணர்ந்திருக்க வேண்டும். "பவதி கிஞ்சித் அநீஹமாநே கிம் வா பவேத்" என்று ஸ்வாமி தேசிகன் அருளியபடி பகவத் ஸங்கல்பம இல்லாது உலகில் எந்தக் காரியமும் நடைபெற இயலாது என்பதை மனதில் கொண்டு செயல்பட வேண்டும்.

ஆகையால், ஸ்ரீ வைஷ்ணவன் உய்ய ஒரு வழி உண்டு என்றால் அது தமது அவயங்களை பகவத் கைங்கர்யத்தில் ஈடுபடுத்தி நித்ய, நைமித்திக கர்மாக்களில் எவ்வித பலனையும் எதிர்பாராது 'ஸர்வம் பகவத் கைங்கர்யம்' என்று உணர்ந்து தமது காரியங்கள் அனைத்தையும் பகவதர்ப்பணம் செய்வதாலே ஒழிய வேறில்லை. "உண்ணும் சோறு, பருகு நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம், கண்ணன் எம்பெருமான் என்றென்றே கண்கள் நீர் மல்கி..." என்று நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளியிருப்பது போல் நமது 'அஹம்' என்னும் 'பாவ'த்தை விடுத்து 'எல்லாம் அவன் செயல்' 'அவன் நம்மைக் காத்து ரக்ஷிக்கக் கூடியவன்' என்ற 'ஸ்திரநியத்தோடு' எம்பெருமானின் திருவடியை சார்ந்தால் ஸ்ரீ வைகுண்டத்தில் அவனுக்கு திருவுள்ளப் பாங்கான நித்ய கைங்கர்யத்தை செய்வதற்குரிய 'ப்ராப்தி' கிடைக்குமாறு அருள் புரிவான் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை.

# வரவேற்கிறோம் – "ஞானபூமி"

ஆன்மீகத் துறையில் பூத்ததொரு அற்புதப் பூவாக மலர்ந்திருக்கிறது "ஞானபூமி" மாத இதழ். இதயத்திலிருந்து வெளிவரும் இந்துமதக் குரலான "ஞானபூமி" அதன் பெயரைப் போலவே சிறப்பாக அமைந்திருக்கிறது. அற்புதச் சாதனைகளைப் புரிந்து வரும் திருமணியனையும், திரு பொன் பாஸ்கரமார்த்தாண்டனையும் ஆசிரியர்களாகக் கொண்டிருக்கும் 'ஞானபூமி' ஆஸ்திக உலகில் நிச்சயம் சாதனைகளைப் புரியும் என்பதை முதல் இதழே தெரிவிக்கிறது.

வெகுஜனப் பத்திரிகைகள் நடத்துபவர்களனைவரும் வைணவ சம்பிரதாயத்திற்கு உரிய இடத்தைத் தருவதில்லை என்ற மனக்குறை எப்போதுமே உண்டு. இதற்கும் மேலாக வைணவர்கள் மனதைப் புண்படுத்தும் வகையில் கதை, கட்டுரை, செய்திகள் ஆகியவற்றை வெளியிட்டு வருகிறார்கள். இவ்வாறெல்லாம் இல்லாமல் "ஞானபூமி" வைணவத்திற்கும் உரிய இடத்தைத் தந்து தன்னைப் பெருமையுறச் செய்ய வேணுமென்று விருப்பம் தெரிவித்து திரு மணியன் அவர்களுக்கு எழுதினோம்.

முதல் இதழில் ஸ்ரீமத்பரமஹம்ஸ வானமாமலை ஜீயர் ஸ்வாமி, ஸ்ரீமத்பரமஹம்ஸ அஹோபிலம் ஜீயர் ஸ்வாமி ஆகியோரது திருவுருவப்படங்களை வெளியிட்டும், பேயாழ்வாரது அவதாரஸ்தலமான திருமயிலையைப் பற்றிய "திருத்தலக் கட்டுரை" வெளியிட்டும் நமது விருப்பத்தை ஓரளவுக்கு நிறைவேற்றியிருக்கிறது 'ஞானபூமி'. இந்நிலை தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்றும், 'ஞானபூமி' எல்லாச் சிறப்புக்களையும் பெற்று விளங்க வேண்டும் என்றும் ஆசார்யன் திருவடிகளில் பிரார்த்திக்கிறோம்.

ஆசிரியர்

# சேவகக் கண்ணன்

( சென்ற இதழ் தொடர்ச்சி )

நற்காலச் சேவகர்களின் இலட்சணத்தை மேலே பார்த்தோம். இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு வேலைக்காரனு? இவன்.

''பண்டைக் காலத்துப் பத்தியத்தில் ஒன்றெனவே'' கண்ட பாரதியாரும் களிப்புடனே அவனை ஆளாகக் கொண்டு விட்டார்! அதனால் என்ன பலன் ஏற்பட்டது! ''அன்று முதற்கொண்டு நாளாக நாளாக நம்மிடத்தே கண்ணனுக்குப் பற்று மிகுந்து வரப் பார்க்கின்றேன்!

---

N. வேணுகோபால நாயக்கர்

---

கண்ணனுடைய பற்று மிகுந்தால் என்னவெல்லாம் நன்மை கிடைத்தது! பாரதியாரின் கவிதா சாமர்த்தியம் போதவில்லை, ஒப்புக் கொள்ளுகிறார்!

கண்ணனுல் பெற்றுவரும் நன்மை எல்லாம் பேசி முடியாது!

சரி! எப்படித்தான் கண்ணன் வேலை செய்கிறான்?

''கண்ணை இமை இரண்டும் காப்பது போல், என் குடும்பம் வண்ணமுறக் காக்கின்றான்!

இமையிருந்தால் விழிக்கு அபாயமில்லை! இவனிருக்கிறதால் கவிக்கும் அபாயமில்லையாம்!

அரசாங்கப் பணி புரிவோர்கள், பார்க்கப்படவேணும்; கேட்கப்படக் கூடாது! அதாவது பொது மக்கள் காணப் பணிபுரிய வேணும்; பொது மேடைகளில் நின்று பேசக் கூடாது! வேலை செய்கிறவன் தான் வாயை மூடிக்கொண்டு

காரியத்தைக் கவனிப்பான்! எனவே, பாரதியார் சொல்லு கிறார்:

**'வாய் முணுத்தல் கண்டறியேன்!''**

கேட்டறியேன் என்றல்லவா கூற வேணும்? சிலசமயம் வேலைக்காரர்கள் பேசுவார்கள்; கேட்க முடியாது. கண்ணுல் பார்த்தால்தான் அவர்களுடைய உதடுகள் அசைவது தெரியும். கண்ணனுடைய வாய் முணுப்பைக் கண்ணுல் கூடக் காணவில்லையாம்! வாயை முணுத்தால்தானே!

சரி! கண்ணனைப் பற்றிக் கண்ணுல் காணுவதுதான் என்ன? அவன் வந்தபோது சொன்னபடி

**''வீதி பெருக்குகிறுன்! வீடு சுத்த மாக்குகிறுன்!**
தப்புக் கண்டுபிடித்தால், தமுக்கா போடுகிறுன்?

**தாதியர் செய் குற்றமெல்லாம், தட்டி யடக்குகிறுன்!**

குழந்தைகளிடம் எப்படி? பெரியவர்களுக்கு எல்லா வேலைகளையும் செய்யாமற் போனுலும், அவர்கள் பார்த்துக் கொள்ளுவார்கள். ஆனுல் குழந்தைகள் விஷயம் அப்படி யல்ல! அதனுல் தான் கண்ணன்:

**மக்களுக்கு வாத்தி! வளர்ப்புத்தாய்!**
**வைத்தியனுய்! ஒக்க நயம் காட்டுகிறுன்!**

பொருள்கள் என்றுல் மிக அலட்சியம் வேலைக்காரர் களுக்கு! விலைவாசிகளின் கஷ்டம் ஒன்றும் தெரியாது! அவர் களுக்கு! கண்ணனே:

**''ஒன்றும் குறைவின்றி பண்டமெல்லாம் சேர்த்து வைத்துப் பால் வாங்கி, மோர் வாங்கி**; வைப்பான்! இது

மட்டுமா? இந்தப் பொறுப்பை ஆற்ற வேண்டியவர்கள் வீட்டுப் பெண் **மணிகள்!** சோம்பலும் அறியாமையும் அகன்றால் தானே அவர்கள் இவைகளைக் கவனிப்பார்கள்! அப்படியிருந்தும் கண்ணன் :

**பெண்டுகளைத் தாய்போல்; பிரியமுற ஆதரித்து**

வீட்டில் எல்லோருக்கும் கண்ணன் :

**நண்பனாய்! மந்திரியாய்! நல்லாசிரியனுமாய்!**

விளங்குகிறான்!

பாரதியார் ஐயப்பட ஆரம்பித்தார்! இவைகள் சாதாரண வேலையாளின் குணங்களல்லவே! தெய்வத் தன்மை தான்! ஆனாலும் அவன்பார்க்கிற பார்வையைப் பார்த்தால் வேலைக்காரனாகவே தோன்றுகிறானே!

**பண்பிலே தெய்வமாய்ப் – பார்வையிலே சேவகனாய்!**

எங்கிருந்தோவந்த இவன், சந்தேகத்துக்கு இடம் வைக்காமல், தன்னை **இடைச்சாதி** என்று சொல்லிக் கொண்டான்!

இத்தகைய கண்ணனை அடைந்த பாரதியாருக்கு ஏற்படும் பெருமையைப் பாருங்கள்!

**''இங்கிவனை யான் பெறவே—என்ன தவம் செய்து விட்டேன்!**

**''உண்ணுஞ் சோறு, பருகு நீர், தின்னும் வெற்றிலையு மெல்லாம்**

**கண்ணன் எம்பெருமான் என்றே கண்கள் நீர் மல்கி''**

உருகினார் **நம்மாழ்வார்!**

**''சேம நல்வீடும், பொருளும், தருமமும் சீரிய நல்**

**காமமும் என்றிவை நான்கென்பர்; நான்கினும் கண்ணனுக்கே**

**ஆம்: அது காமம், அறம், பொருள் வீடு இதற்கென் றுரைத்தான்**

**வாமனன் சீலன், இராமாநுசன் இந்த மண் மிசையே''**

என்று அனைய வாழ்க்கைப் பேறுகளையும் கண்ணனுக்கே அர்ப்பணிக்க வேண்டுமென ஸ்ரீராமாநுஜர் உபதேசித்தருளியதைத் திருவரங்கத்து அமுதனார் இராமாநுச நூற்றந்தாதியில் சாதித்தருளுகின்றார்.

"நாம் இறைவனிடம் அன்பு செலுத்த வேண்டும். அவன் நம் வேலைகளை எல்லாம் முடித்து வைப்பான்; உடனிருந்தும், முன்னிருந்தும்" என்று மகான்கள் உபதேசித்தருளிய பெரும் உண்மையை மகாகவி பாரதியார், புதுமை மெருகு கொடுத்து இப்படியெல்லாம் நம்மை ரசிக்க வைத்துள்ளார். மேலும்,

**எண்ணம், விசாரம் எதுவும் அவன் பொறுப்பாய்ச்**
**செல்வம், இளமாண்பு, சீர் சிறப்பு நற்கீர்த்தி,**
**கல்வி, அறிவு கவிதை**

முதலான ஒளிசேர் நலமனைத்தும் கண்ணனால் ஓங்கி வருமாம்!

"அருச்சுனா! சகல பற்றுக்களையும் விடுவாயாக! என்னையே சரணாகப் பற்றுவாயாக! நான் காப்பாற்றுகிறேன்!" எனக் கண்ணன் கீதையில் அருளியதைக் கடைப்பிடித்து:

**'கண்ணனை நான் ஆட்கொண்டேன்!**
**கண் கொண்டேன்! கண்கொண்டேன்!**
**கண்ணனை (நான்) ஆட்கொள்ளக் காரணமும்**
**உள்ளனவே!**

எனத் தன் எக்களிப்பை வெளியிடுகின்றார் வரகவி சுப்பிரமணிய பாரதியார்!

நம் கவலைகளை எல்லாம் கண்ணனிடம் ஒப்படைத்தால், அவைகளை அவனே நிறைவேற்றி வைப்பான் என்ற மயர்வறும் மதிநலத்தை பெறுவோமாக!

# ஸ்ரீவைஷ்ணவம்

Dr.V.V. ராமாநுஜம்

ஒரு ஸ்ரீ வைஷ்ணவனை இவன் வைஷ்ணவன் என்று கண்டு கொள்ள உதவும் தனி (distinctive) அடையாளம் இவன் அணியும் திருமண்காப்பே. இதனால் என்ன பயன்? எனில் ஆத்மக்ஷேமமும் சரீரக்ஷேமமும் என்று முன் இதழிலே விண்ணப்பித்தேன். இதைச் சிறிது விவரிக்கிறேன்.

திருப்பாவையில் **ஆழிமழைக்கண்ணா** (4-ம் பா) வியாக்யான (6000) அவதாரிகையில், ''**த்ரவந்தி தைத்யா: ப்ரணமந்தி தேவதா:** என்கிறபடியே பகவத் ஸமாச்ரயணம் பண்ணினார்க்குத் தேவதைகள் தாங்களே வந்து குடதீர் வார்க்கக் கடவதிறே ''அவைதான், ஸ்ரீ வைஷ்ணவர்களை அநுவர்த்தியாதொழிவதென்?'' என்று கேளாய் என்று ஆழ்வான்''—என்று பங்க்திகள். ஸ்ரீ வைஷ்ணவர்களைக் கண்டால் அஸுரர் அஞ்சியோடுவர்; தேவதைகள் வந்து பூசிப்பர்'' என்று ஸம்ஸ்க்ருத ப்ரமாணத்திற்குப் பொருள். பூசிப்பதாவது, வந்து வணங்கி அர்க்யம், பாத்யம் (கை, கால் அலம்ப நீர் தருதல்) முதலியன ஸமர்ப்பித்து பூசிக்கை. அஸுரர்கள் ஏன் ஓட வேண்டும்? அவர்களும் வந்து அநுவர்த்தித்து வாழ்ந்து போகலாகாதோ? என்று கேட்பாராக —என்று ஆழ்வான் (தம் சிஷ்யருக்குச் சொன்னதாக) கூற்றாகக் காண்கிறது. மேலும், அங்கேயே, திருமழிசைப் பிரான் நான்முகன் திருவந்தாதியில் (68-ம் பா) அருளியுள்ள ''திறம்பேல் மின்'' என்ற பாசுரமும், அதற்கும் மூலமான ''ஸ்வபுருஷம்'' என்ற ஸ்ரீ விஷ்ணுபுராண ச்லோகமும் விளக்கப்படுகின்றன. ஸாரம் இதுவே. கையில் பாசமேந்தி,

பார்க்க பயமுண்டுபண்ணும் தன் ஆட்களைக் கூவி அழைத்து யமதர்மராஜன் அவர்களிடம் காதோரமாய் (ரகசியமாய்) ''ஸ்ரீ வைஷ்ணவர் தவிர்த்த இதர மனிசர்க்குத்தான் நான் ப்ரபு. அவர்களுக்கல்ல. அவர்களைக் கண்டால் விநயமாக வணங்கி விலகிவந்து விடக்கடவீர்.'' என்று சொல்லி அனுப்புகிறான். ஸ்ரீ வைஷ்ணவர்களிடம் அணுக யமபடர்கள்—ஏன் யமனும்கூட பயப்படுவார்கள் என்று சாஸ்த்ரம் கூறுகிறது. ஸ்ரீ வைஷ்ணவன்—பகவத் ஸமாச்ரயணம் பண்ணினவன்—இவன் என்று அறிவது இவனணியும் திருமண் காப்பாலே அல்லவா? திருமண் காப்பை ''ஸ்வரூபம்'' என்று அடியேனுடைய ஆந்திர நண்பர் ஒருவர் வ்யவஹரிக்கக் கேட்டு மிக மகிழ்வெய்தினேன். ஸ்வரூபம் என்பதும் ஒருவித uniform தானே? நமது வீடுகளிலும் நுழைவாயிலில் நன்றாக விளங்கும் திருமண் காப்பு இருக்க வேண்டும். இது ஒரு வைஷ்ணவனுடைய இல்லம் இங்கு நமக்கு வேலை இல்லை என்று நம்மை நலியக்கூடிய காற்று விசேஷங்கள் அண்டா. நமன் தமர்களும் வர அஞ்சுவர்.

கீதாசார்யன் ஆசிரியர் கூறிய உண்மை நிகழ்ச்சியை இங்கு கூற விரும்புகிறேன். நண்பர் ஒருவர் மாலை இருட்டு நெருங்கும் வேளையில் ஸைகிளில் சென்று கொண்டிருந்தார். அவசரத்தில் தமது ஸைகிள் விளக்கை ஏற்ற மறந்து விட்டார். வழியில் ஒரு காவல் அதிகாரி (constable) அவரைத் தடுத்து ''ஏன் விளக்கு இல்லாமல் செல்கிறீர்?'' என்று கேட்டார். நண்பர் அவசரத்தில் ''ஏற்றினேன் ஆனால் வழியில் அணைந்து விட்டது'' என்று சொல்லி விட்டார். விளக்கைத் தொட்டுப் பார்த்த அதிகாரி, அது குளிர்ந்திருப்பதுகண்டு ''நெற்றியில் நாமமிட்டுக் கொண்டிருக்கும் நீரே பொய் சொல்லலாமா? சரி, சரி, விளக்கை ஏற்றிக் கொண்டு போம்'' என்று சொல்லி அனுப்பிவிட்டார். காவல் அதிகாரிகூட திருமண் அணிந்தவன் பொய் சொல்லக்

கூடாது என்று எதிர்பார்க்கிறார். ஏதோ அவசரத்தில் பொய் சொல்லிவிட்டார். போகட்டும் என்று அவரை எண்ணச் செய்ததும் நண்பர் அணிந்திருந்த திருமண்காப்பே. அந்த மதிப்பை எப்போதும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று நமக்கே தோன்றும். எனவே திருமண்காப்பு நம்மை நேர்மையிலிருந்து பிறழாமல் காக்கும் ரக்ஷையாக அமை கிறது.

"பெருமாளுக்குத் திருமுகத்தில் ஏன் திருமண்காப்பு அணிவிக்க வேண்டும்? தன் திருவடிகளைத் தானே நெற்றியில் அணிகிறாரா உங்கள் பெருமாள்?" என்று ஒரு நண்பர் ஒரு சமயம் கேட்டார். அவர்க்கு அடியேன் தந்த ஸமாதானம் இதுவே. "திருமண்காப்பு ஹரிபாத ஆகாரம் (shape) ஆக அமைய வேண்டுமென்பதேயொழிய அது ஹரிபாதமாகவே உள்ளது என்று எங்கும் கூறவில்லை. 'ஸ்ரீவைஷ்ணவத்வ சிஹ்நமிறே திருத்வாதசநாமம்' என்று எம்பார் திருவாக்கு. இது ஒரு அடையாளமே. ஆகையால் தனது அடியார்களுக்கு ஆதர்சமாக விளங்க விரும்பும் பெருமாள் அதை அணிவதில் தவறொன்றுமில்லை. நீர் சொல்லும்படியே கொண்டாலும், தன்னடியார்கள் தன் திருவடிகளைத் தேறாறும் திருவடிமலர் கள் என்று கொண்டாடுகிறார்களே என்று அதைத் தானே (ஆலிளந்தளிர்மேல் ; பாலகனாய் இருந்து) சுவைத்தான்" என்று ஆசாரியர்கள் ரஸமாகச் சொல்லக் கேட்கிறோம். அதே போல், 'தன்னடியார்கள் அணிந்து மகிழும் திருமண் காப்பைத் தானும் அணிந்து மகிழ்கிறான்' என்று சுவை பயக்கவும் கூறலாம்".

"சொல்லுவோம் வைஷ்ணவன் யாரெனக்கேளீர் — சோர்ந்தவர் பீடையை அறிவானே" என்பது நாடெங்கு மறிந்த நர்சி மேத்தாவின் "வைஷ்ணவ ஜனதோ" பாடலின் முதலடியின் தமிழாக்கம். பிறர்துக்கமறிந்து' ஐயோ' என்று இரங்கி அதைத்துடைக்க முயல்பவனே வைஷ்ணவன் என்று முன்னமே சொன்னோம். இதுவே ஆட்கொண்டவில்லி ஜீயர்

நஞ்சீயருக்குச் சொன்ன வார்த்தையும், வைஷ்ணவனின் அகத்தை விளக்கும் லக்ஷணங்கள் எறும்பியப்பாவினால் மிகவும் அழகாகக் காட்டப்பட்டுள்ளன.

**அபகதமதமாநை: அந்திமோபாயநிஷ்டை:**
**அதிகதபரமார்த்தை: அர்த்தகாமாநபேக்ஷை: |**
**நிகிலஜநஸுஹ்ருத்பி: நிர்ஜிதக்ரோதலோபை:**
**வரவரமுநிப்ருத்யை: அஸ்துமேநித்யயோக: ||**

ஸ்ரீவைஷ்ணவர்களாய் மணவாளமாமுனிகளுடைய அடியார் அடங்கிய கூட்டத்துடன் அடியேன் நிச்சலும் ஸம்பந்தமுடையவனாக வேணும் என்று இங்கு ப்ரார்த்திக்கிறார் எறும்பியப்பா. அந்த அடியார்களுக்கு இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. இந்தப் பாசுரத்தில், இங்கு காட்டப்பட்ட ஆறு லக்ஷணங்களும் ஒவ்வொன்றும் இன்றியமையாதவையே. **நிகில ஜநஸுஹ்ருத்** என்பது மிகவும் முக்கியமானது.

**அடியார்கள் வாழ! அரங்க நகர் வாழ!**
**சடகோபன் தண்தமிழ்நூல் வாழ! கடல்சூழ்ந்த**
**மன்னுலகம் வாழ!**

என்று, கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில் யாவரும் யாவையும் நன்றாக வாழ்ந்து இன்புற்றிருக்க வேண்டும் என்று இவரும் முக்காலமும் வேண்டுபவர் வைஷ்ணவர்களேயன்றோ? "ஸர்வே ஜநா: ஸுகிநோ பவந்து" என்று இதயங்கனிந்து வேண்டுபவர்கள் இவர்கள். இவர்களுக்கு யார் ஒருவரிடத்திலும் வெறுப்பென்பதே கிடையாது. எதையும் ஸர்வேச்வரனுடைய விபூதி (ஐச்வர்யம்) என்ற கண்ணோக்குடன் கண்டு செயல்படுவதால் யாவரும் (யாரையும்) நண்பரே; பகைவரே கிடையாது. ஸுஹ்ருத்—என்றால் நல்லெண்ணமுடையவன் என்று பொருள். நிகிலஜந ஸுஹ்ருத்—யாதொரு விலக்குமில்லாமல் யாவரிடத்திலும் நல்லெண்ணமேயுடையவர்கள் மாமுனிவனடியாரான ஸ்ரீவைஷ்ணவர்கள் என்றதாயிற்று.

(தொடரும்)

ணத்திலும் என்றும் அவன் விளங்கிக் கொண்டிருந்தான். அதற்குப் பதிலாக அவர்களைப் பழி வாங்கிவிட வேண்டும் என்ற எண்ணமும் அவனுடைய மனத்தில் உறுதிப்பட்டிருந்தது. உலகத்துக்குத் துன்பத்தை அளிக்கவல்ல ஊழிக்காலத்து மேகங்களை அழைத்தான் அவன்.

''உலகத்துக்கு முடிவு கொடுக்கும் அளவிற்கு வலிமை வாய்ந்த முகில் மன்னர்களே! பூவுலகில் யமுனை நதிக்கரையில் பிருந்தாவனத்துக்கு அருகில் பசுக்களைப் போற்றிப் பேணும் ஒரு மரபினர் இருக்கின்றனர். அவர்கள் ஆயர்கள் என்ற பெயரினர். அவர்கள் வசிக்கும் பகுதிக்குக் 'கோகுலம்' என்று பெயர். ஆண்டு தோறும் எனக்கு நன்றி செலுத்தி என்னை வழிபட்டு வந்த அவர்கள் இந்த முறை என்னை வழிபடாது அவமதித்து விட்டார்கள். அவர்களை அவ்வாறு செய்யும்படி கண்ணன் தூண்டியிருக்கிறான். எனக்குச் செய்ய வேண்டிய வழிபாட்டைக் கேவலம் ஒரு மலைக்குச் செய்து என்னை ஏமாற்றி விட்டான் கண்ணன். இந்த ஏமாற்றத்திற்குச் சரியானபடி பழிவாங்கியே தீரவேண்டும். அதற்காகத்தான் இப்போது உங்களுடைய உதவியை நாடினேன். நீங்கள் கோகுலத்தில் போய் ஓயாமல் மழையைப் பெய்ய வேண்டும். அதன் விளைவாகத் தாங்க முடியாத வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு அங்குள்ள உயிர்களெல்லாம் அழிந்து படச் செய்ய வேண்டும்'' என்று மேகங்களுக்குக் கட்டளையிட்டான் இந்திரன். அவனுடைய கட்டளையை ஏற்றுக் கொண்டு மேகங்கள் இடி முழக்கம் செய்து புறப்பட்டன. மேகங்களை அனுப்பிய அளவில் மன நிறைவு பெறாமல் தானே தன் வெள்ளை யானையில் ஏறிக்கொண்டு நேரில் புறப்பட்டான் இந்திரன். உயிர்க் குலத்தை அஞ்சி நடுங்க வைக்கும் ஊழிப் பெரு மழை ஆயர்பாடியில் பெய்யத் தொடங்கிற்று. ஒரு நாளா? இரண்டு நாளா? அப்படி ஏழு நாட்கள் பெய்தது அந்த மழை. மரம், செடி, கொடிகள், வீடுகள் எல்லாம் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகப்பட்டன. மாடுகள், கன்றுகள்,

மக்கள் எல்லோரும், நமக்கு 'அழிவு காலம் நெருங்கிவிட்டதே' என்று நம்பிக்கையிழந்து மனமொடுங்கிப் போயினர். எல்லோருடைய மனத்திலும் உடைமைகளைப் பற்றிய நினைவுகள் குறைந்து கடவுளைப்பற்றிய நினைவு உண்டாகிவிட்டது. எங்கும் கூக்குரலும், ஓலமும் அழுகையும் அலறலும், மழையொலியையும் மீறிக்கொண்டு ஒலித்தன.

அந்தச் சமயத்தில் கண்ணன் மட்டும் சிரித்துக் கொண்டு நின்றான். "நான் இருக்கும் போது என்னை மீறி யாரும் எதையும், அழிக்க முடியாது. அழியவிடமாட்டேன்" என்று உறுதிமொழி கூறுவதுபோல் இருந்தது அந்தச் சிரிப்பு. எல்லோரும் கண்ணனிடம் ஓடிவந்து முறையிட்டார்கள். "என்னிடம் முறையிடுங்கள் நான் காப்பாற்றுகிறேன்" என்று வலிய அழைப்பது போலிருந்தது அப்போது அவன் சிரித்த சிரிப்பு.

"கண்ணா! எல்லாம் இழந்துவிட்டோம். எங்களை இழக்க மனம் இல்லை. நீதான் காப்பாற்ற வேண்டும். வீடு, வாசல்களெல்லாம் நீர்ப்பெருக்கில் மூழ்கிவிட்டன. நாங்கள் மூழ்கி விடாமல் காக்க வேண்டிய பொறுப்பு உன்னுடையது."—

கண்ணன் அவர்களுக்கு மறுமொழி கூறவில்லை. சிரித்துக் கொண்டே அவர்களைத் தன்னைப் பின்பற்றி வருமாறு சைகை செய்து கூப்பிட்டான். எல்லோரும் "நாம் காக்கப்படுவோம்" என்ற நம்பிக்கையோடு அவனைப் பின்தொடர்ந்து நடந்தார்கள். கண்ணன் எல்லோரையும் கோவர்த்தன மலையின் அடியில் கொண்டுபோய் நிறுத்தினான்.

மறுகணம் அவனுடைய உருவம் மிக வலிமை வாய்ந்த மல்லனுடைய உருவத்தைப்போல் ஆயிற்று. கோவர்த்தன மலை அவனுடைய கையில் குடையாக மாறி அவர்களுக்கு

நிழல் அளித்தது. கண்ணனுடைய கைகள் 'அந்த மாபெரும் மலையை எப்படித் தூக்கித் தாங்கினவோ'—என்று அவர்கள் மனத்தில் ஒரு பயம் இருந்தது. கை சலிக்காமல் மனம் சலிக்காமல், மழை சலிக்கின்ற வரை அந்தக் குன்றைக் குடையாகப் பிடித்துக் காக்க முடிந்தது அவனால். இந்திரன் பயந்து போனான். ஏழு நாட்களாக முயன்று பார்த்தும் கோகுலத்தை அழிக்க முடியவில்லையே என்ற பயத்தில் தன்முயற்சியையே நிறுத்திவிட்டான் அவன். ஊழிமேகங்கள் வந்த வழியே திரும்பிச் சென்று விட்டன; வானம் வெளிவாங்கிவிட்டது. எல்லோரும் கண்ணனே கண்கண்ட கடவுளென்று வணங்கி வியந்தனர்.

கோகுலத்தார் மனத்திலிருந்த துன்பமும், மழையால் நிறைந்த வெள்ளமும் ஒருங்கே வடிந்தன. எல்லோரும் அவரவர்கள் இருப்பிடத்திற்கு மீண்டனர். நந்தகோபர், பலராமன் முதலியவர்கள் கண்ணனைத் தெய்வமாகவே மதித்துத் தங்கள் நெஞ்சார வந்தித்து வாழ்த்தினர். மழையால் வந்த வினையை மலையால் போக்கிய கண்ணனின் செயல் தேவர்களாலேயே புகழப் பெற்றது. இந்திரனுடைய கொடுமை மழை ஓய்ந்தது. வெறுமையுற்றிருந்த வானத்தில் கண்ணனைப் போற்றித் தேவர்கள் பொழிந்த பூ மழை நிறைந்தது. பொன் மழை நிறைந்தது. வாழ்த்தொலி என்ற மங்கலக் குரல் மழை நிறைந்தது.

(தொடரும்)

ஸ்ரீதாசார்யன் சந்தா விவரம

ஆயுள் சந்தா ரூ 250

வருடச் சந்தா ரூ 12

# திருவரங்கன் உலா

ஸ்ரீவேணுகோபாலன்

## 18. ஒய்சளர் நிலை

அடுத்த இருநாழிகையில் அழகிய நம்பி மேலே தழைப் பந்தல் கீழ் தனியாகவும், எளிமையாகவும் வீற்றிருக்கும் அரங்கனைக் கண்டு உணர்ச்சிகள் மேலிடக் கண்களில் நீர் பொங்க, "சுவாமி!" என்று தழதழப்புடன் கூவி, அவர்முன் நெடுஞ்சாண்கிடையாக வீழ்ந்து, "சுவாமி! உமக்கு இது நேருமோ? அரச வாழ்வு வாழ்வு வாழ்ந்தீரே? இன்று துறவி போல் உண்ண உணவு கூட இன்றித் தவிக்கிறீரே?" என்று பலவாறாகப் புலம்பி, கிடந்த கிடையாக வெகு நேரம் இருந்தான்.

அழகர் மலைக்கு வந்த இரண்டே தினங்களில் அழகிய நம்பி அங்குள்ள நிலவரங்களைப் புரிந்து கொள்ள ஆரம்பித்தான். அரங்கன் ஒரு இக்கட்டான இடத்தில் சிக்கிக் கொண்டிருப்பதை அறிந்தான். டில்லித் தளபதி வாழும் மதுரைக்கு இவ்வளவு அருகாமையில் அரங்கனைக் கொணர்ந்ததே ஒரு தவறான காரியம். இப்போது இங்கிருந்து அவரை வேறிடத்திற்கு அகற்றிச் செல்வது மிகவும் ஆபத்தான காரியம்! இந்நிலையில் என்ன செய்யலாம்?

பொன் ஆபரணங்களை விற்கப் போன மூத்த கொடவர் மூன்றாம் நாள் காலையில்தான் திரும்பி வந்தார். ஆபரணத்தை விற்பதற்கு மிகவும் சங்கடமாக இருக்கிறதென்றும், யாரும்

வாங்குவதற்கு அகப்படவில்லை என்றும் கூறினர். "ஊர் ஜனங்கள் எல்லாரும் ஓடிவிட்டார்கள். ஆட்களைப் பார்ப்பதே கஷ்டமாக இருந்தது. பொன்னைக் கொடுத்தாலும் தானியங்கள் கிடைப்பது அரிதாகி விட்டது எல்லாத் தானியங்களையும் டில்லி ஆட்கள் எடுத்துச் செல்கிறார்களாம். எனக்குக் கிடைத்ததே சொற்ப அளவு அரிசிதான்" என்று கூறி மூட்டையைக் காண்பித்தார் அவர்

"அப்படியானால் இனி என்ன செய்யலாம்? அரங்கனுக்குத் தினமும் எப்படி வெறும் கனி வகைகளையே ஆகாரமாகக் கொடுப்பது? அது அவருக்கு ஒத்துக் கொள்ளுமோ?" என்று கேட்டான் அழகிய நம்பி

"அதுதான் எனக்கும் தெரியவில்லை" என்றார் மூத்த கொடவர்.

"அப்படியானால் என்ன செய்வது?" என்றான் நம்பி.

"அரங்கனை வெளியேற்றிக் கொண்டு போக முடியுமா?" என்றார் ஒருவர் திடீரென்று.

"வழி இருக்கிறதாவென்று பார்க்கிறேன்" என்றான் நம்பி

"எப்படிப் பார்ப்பீர்கள்?" என்றார் மூத்த கொடவர்.

"மாறு வேடத்தில் மதுரையையும் அதன் சுற்றுப் புறத்தையும் கவனித்து விட்டு வருகிறேன்" என்றான் அழகிய நம்பி.

"ஆபத்தான காரியமாயிற்றே" என்றார் ஒருவர்.

"பயப்பட்டால் நடக்காது. நான் புறப்படுகிறேன்" என்றான் நம்பி.

மறுநாள் ஆண்டி போல் வேடம் தரித்த அழகிய நம்பி அழகர் மலையிலிருந்து இறங்கி, மதுரை நோக்கிச் செல்லும் பாதையில் நடந்து சென்றான்

கோடைகால வெய்யிலில் நடந்து மதுரையை மதிய வேளைக்கு அடைந்தான். மதுரைக் கோட்டை வாசலில் பலத்த காவல் படை இருந்தாலும், போவோர் வருவோரின் போக்கு வரத்தை எல்லாம் அவர்கள் கட்டுப்படுத்தவில்லை.

ஒரு பார வண்டியின் பின்புறமாகச் சென்ற அவன் வண்டியைச் சேர்ந்த வேலையாள் போல அதைத் தள்ளிக்கொண்டே கோட்டைக்குள் போய் விட்டான்.

மதுரை நகரையும் அதன் சுற்றுப்புறங்களையும் அருகிலுள்ள பல சீமைகளையும் பார்த்து விட்டு, அழகிய நம்பி முடிவில் அழகர் மலைக்குத் திரும்பினான். அவனுக்கு ஒரு விஷயம் நிச்சயமாகத் தெரிந்தது. மதுரையில் ஒரு பெரியவர் கூறியது போல் தெற்கே போகும் வழிகளை எல்லாம் அடைத்துக்கொண்டு டில்லி வீரர்கள் நின்று கொண்டிருந்தார்கள். தமிழ்ச் சீமைகளின் சொத்துக்கள் நாஞ்சில் நாடு வழியாகக் கேரளம் போய் விடக்கூடாது என்பதற்காக அவர்கள் கவனமாக நின்றார்கள். குறிப்பாக அரங்கன் மீதும் அவரது பரிவாரங்கள் மீதும் தான் அவர்கள் குறியாக இருந்தார்கள்.

போய் வந்த விஷயங்கள் யாவற்றையும் தனது பரிவாரத் தோழர்களிடம் நம்பி கூறினான்.

எல்லாரும் அதன் பேரில் ஆலோசனையில் ஆழ்ந்தார்கள். அப்போதிருக்கும் சூழ்நிலையில் அழகர்மலையை விட்டு அரங்கரைக் கொண்டு போவது சரியல்ல என்று முடிவு செய்தார்கள்.

பிறகு வல்லாளனைப் பார்க்கப் போன குலசேகரன் மூன்று மாதங்களாகியும் திரும்பிவரவில்லை என்பதைக் குறித்து ஆலோசித்து இனி ஒரு வாரத்தில் அவன் திரும்பாவிட்டால் அழகியநம்பி திருவண்ணாமலை செல்ல வேண்டும் என்றும் அவர்கள் முடிவெடுத்தார்கள்.

ஒய்சள மன்னரின் அரண்மனைக்குப் பலமுறை போய் வந்த குலசேகரனும் குறளனும் தொடர்ச்சியாக ஏமாற்றம் அடைந்து வந்தார்கள். மன்னர் அவர்களிடம் இடங் கொடுத்துப் பேசவில்லை. இதனால் விரக்தி அடைந்த அவர்கள் கடைசி முறை ஒருநாள் மன்னரைத் தைரியமாகப் பார்த்து விடுவது என்று தீர்மானித்தார்கள். ஒரு புதன் கிழமையைத் தேர்ந்தெடுத்து அவர்கள் புறப்படும் வேளையில் சத்திரத்து வாசலில் திடீரென்று அழகியநம்பி நிற்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தார்கள். அவனை உள்ளே அழைத்துப் போய் விஷயம் எல்லாம் பேசினார்கள். பிறகு, "நம்பி! நல்ல நேரத்தில்தான் நீயும் வந்தாய்! மன்னரிடம் இன்று கடைசி முறை பேசிவிடுவோம்" என்று கூறிப் புறப்பட்டார்கள்.

மூன்று பேர் வேண்டாம் என்பதற்காக குறளனை சத்திரத்தில் விட்டுவிட்டு மற்ற இருவரும் அரண்மனையை அடைந்தார்கள்.

பிறகு மன்னரின் தரிசனம் வேண்டிக் காத்துக் கிடந்து மதிய வேளையில் அவரது சமூகத்தை அடைந்தார்கள். ஒய்சளரின் பொலிவும் அறிவு மயமான கண்களும் அழகிய நம்பியை ஈர்த்து நிறுத்தின.

"நல்லது! உங்களை நான் வெகு நாட்கள் கவனியாது இருந்து விட்டேன். அது எனது அலட்சியத்தினால் அல்ல. எனக்கு எத்தனையோ விதங்களில் சங்கடங்கள் தோன்றி

யிருந்தன. அவற்றுக்குத் தீர்வு செய்வதில் நான் ஈடுபட்டிருந்தேன். திருவரங்கவாசிகளே! நானும் ஒரு வைணவன். எங்கள் மூதாதையரான விஷ்ணுவர்த்தனர் உங்கள் குரு ராமானுஜரின் அருளால் பரம வைஷ்ணவர் ஆனார் அந்தப் பரம்பரையில் வந்த நானும் திருவரங்கத்திற்கு நேர்ந்த கதியை எண்ணி மிகவும் வருந்துகிறேன். இப்போதுள்ள நிலையில் நான் எவ்விதத்தில் உதவி செய்ய முடியும் என்று யோசித்துப் பார்க்கிறேன். எனக்கு எதுவும் புலனாகவில்லை'' என்று கூறினார் அந்த அறுபது வயது மன்னர்.

''மன்னர் பெரும! எங்கள் குறிக்கோள் எல்லாம் சிறியது தான். அழகர்மலைக் காட்டுக்குள் திருவரங்கர் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார் அவரை அங்கிருந்து அகற்றித் தெற்கே நாஞ்சில் நாட்டுக்குக் கொண்டு போய் விட்டால், அவருக்கு வேண்டிய பூஜைகளைக் குறைவின்றி நடத்த முடியும். இதற்குத் தான் தங்களது உதவி வேண்டும்'' என்றான் குலசேகரன்.

''நல்லது! நான் என்ன செய்ய முடியும்? சொல்லுங்கள்'' என்றார் அரசர்.

''எமக்கு உதவியாக ஒரு சிறு படை கொடுக்க முடியுமா?'' என்றான் குலசேகரன்.

''எம் படைகள் அனைத்தும் வடதிசையில் ஈடுபட்டிருக்கின்றன. கொங்கண, தெலுங்கு தேசத்து சிற்றரசர்கள் எமக்கு அடிக்கடி தொல்லைகள் கொடுத்து வருகிறார்கள். அவர்களை அடக்கி ராஜ்யத்தை ஒன்று சேர்ப்பதிலேயே என் பொழுது வீணாகப் போகிறது. இளைஞர்களே! நம்மவர்களான கன்னடர்கள், தெலுங்கர்கள், தமிழர்கள் யாவரும் ஒன்று சேர மாட்டார்களா என்று நான் கனவு காண்கிறேன் ஒன்று

கூடினால் இந்தக் கணமே டில்லிப் படைகளை இங்கிருந்து விரட்டி விடலாம். மனம் மூலம் ஒன்று கூடாதவர்களை, நான் சண்டையிட்டு ஒன்று கூட்டப் பார்க்கிறேன். இதில் நான் எம்படைகள் பல திசைகளிலும் ஈடுபட்டிருக்கின்றன. இந்த நேரத்தில் நீங்கள் தென் பகுதிக்கு என் கவனத்தைத் திருப்பாதீர்கள். ஏனென்றால் அங்கே இப்போது நான் ஒன்றும் செய்வதற்கில்லை'' என்றார்.

அப்போது அழகிய நம்பி, மதுரை நகரத்துள் ஏராளமான குடும்பப் பெண்களும், திரவியங்களும் அகப்பட்டுக் கிடப்பதை மன்னருக்குச் சுட்டிக் காட்டினான். அந்தப் பெண்களையும், திரவியங்களையும் காப்பது மன்னரது கடன் என்று கூறினான்.

ஒய்சளர் அவர்கள் சொற்களைக் கேட்டு இரக்கம் காண்பித்தாரே ஒழிய படை உதவிக்கு அவர் துணியவில்லை. ''திரவியங்களை, வேண்டுமானால் கேளுங்கள்! தருகிறேன். எடுத்துச் செல்லுங்கள். வேறு உதவி இப்போது கேட்காதீர்கள்'' என்றார் அவர்.

''யோசித்து விட்டுப் பின்னர் வருகிறோம்'' என்று விடை பெற்று அவர்கள் திரும்பினார்கள்.

(தொடரும்)

# பேராயிரமும் ஓதுமின்கள்

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாம அத்யாயத்தின் பெருமைக்குரிய ஆறு காரணங்களை ஸ்ரீபராசர பட்டர் இரண்டு ச்லோகத்தால் வெளியிடுகிறார். அந்த ச்லோகங்கள்

**"மஹாபாரத ஸாரத்வாத் ரிஷிபி: பரிகாத: |**
**வேதாசார்ய ஸமாஹாராத் பீஷ்மோத் க்ருஷ்டமதத்வத:" :**
**"பரிக்ரஹாதிசயதோ தோத்யை கார்த்த தஸ்ச:**
**ஸஹஸ்ர நாம்நாமத்யாய: உபாதேயதமோமத:**

என்பவை.

---

K.B. தேவராஜன்

---

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமம் மஹாபாரதத்தில் ஸாரமாக இருப்பதாலும் மஹரிஷிகளினால் ஓதப்பட்டதாலும், வேதாசார்யரான ஸ்ரீவேதவ்யாஸரால் தொகுக்கப் பட்டதாலும் பீஷ்மர் தமது திருவுள்ளத்தாலே மிக உயர்ந்தது என்று ஒப்புக் கொண்டமையாலும், பெரியோர்கள் பலராலும் அங்கீகாரம் செய்யப்பட்டமையாலும், வேத முதலான சாஸ்த்ரங்களின் அர்த்தத்தோடு ஒற்றுமை உள்ளபடியாலும் மிக உயர்ந்ததாகக் கொள்ளப்பட வேண்டியது. இதனைச் சற்று விவரிப்போம்.

1 மதிமந்த்தான மாவித்ய யேநாஸௌ ச்ருதிஸாகராத்
ஜகத்திதாய ஜனிதோ மஹாபாரத சந்த்ரமா :"

ஸ்ரீவேதவ்யாசர் தமது புத்தி என்கிற மத்தைக் கொண்டு வேதம் என்னும் கடலைக் கடைந்து உலக நன்மைக்காக மஹாபாரதம் என்கிற சந்திரனை கொடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது. மஹாபாரதத்தின் ஸாரமே ஸஹஸ்ர நாமம் என்று கூறப்பட்டுள்ளதால் ஸஹஸ்ர நாமத்யாயம் ஸாராம்

சங்கவின் சுருக்கமாக கொள்ளப்பட்டுள்ளது என்பது தெரிகிறதே. மேலும் இது சாஸ்த்ரார்த்த நிஷ்கர்ஷம் பண்ண வந்ததா அல்லது ஸ்தோத்ரரூபமாக வந்ததா என்று ஸந்தேஹிக்க இடமில்லாமல் ஒரு பிரமாணத்துக்குரிய எல்லாவித இலக்கணங்களும் பொருந்தியதாக அமைந்துள்ளது. ஆகவே இது மஹாபாரதத்தின் ஸாரம்.

2 மஹரிஷிகளால் ஓதப்பட்டுள்ளது :—

வேதவேதாந்தார்த்தங்கள் எல்லாவற்றையும் நேராகக் கண்டறிந்தவர்களான ஸநகர், ஸநத்குமாரர், நாரதர் முதலானவர்கள் மஹரிஷிகளாவர். எம்பெருமானுக்குப் பல்லாயிரக் கணக்கான திருநாமங்கள் வேதங்களில் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் ஓராயிரத்தை இம் மகரிஷிகள் நாமங்களின் அர்த்தங்களையும் அவற்றின் தத்வங்களையும் நன்கு அறிந்து கீர்த்தனம் பண்ணினர்.

''யாநிநாமாநி கௌணாநி விக்யாதாநி மஹாத்மந:
ரிஷிபி: பரிகீதாநி தாநிவக்ஷ்யாமி பூதயே''

என்கிற சுலோகமும் அனைவரும் அறிந்ததே.

3 வேதவ்யாஸரால் தொகுக்கப்பட்டது :—ஸ்ரீவேதவ்யாசர் வேதாசார்யராக அவதரித்தபடியால் அவரது ஜ்ஞானம் மிகச்சிறந்த ஞானமாகும். அவருடைய ஜ்ஞானத்தில் இருள், துயக்கு, மயக்கு, மறப்பு என்பதற்கே இடமில்லை அவர் கலியுகத்தில் சக்தி குறைந்துள்ள மக்களிடத்தில் அநுக்ரஹம் வைத்து வேதங்களை வகுத்து அதில் அறிய வேண்டிய விஷயங்களில் அஜ்ஞானம், ஐயம், திரிபு, இவற்றை நீக்க வேண்டி ''பாரத: பஞ்சமோவேத:'' என்று சொல்லப்படும் படியான ஐந்தாம் வேதமான மஹாபாரதத்தை இயற்றினர். இதைத் தவிர இவருக்கு பாரம்பரியமாகவே வருமொரு பெருமையும் உண்டு. அதாவது க்ஷத்ரிய ஜாதியில் பிறந்த விச்வாமித்ரரை பிராம்மணராகும் படியாகச்

செய்த ஸ்ரீ வசிஷ்ட பகவானுடைய பேரரான பராசரரின் குமாரராவார். வியாசரின் தனியனாக 'வ்யாஸம் வசிஷ்ட நப்தாரம் ஸக்தேப் பௌத்ர மகல் மஷம் 'பராசராத்மஜம் வந்தே சுகதாதம் தபோநிதிம்'' என்றுள்ள ச்லோகத்திலிருந்து இதனை நன்கு அறியலாம்.

இப்படிப்பட்ட வியாசர் ஸநகாதி முனிவர்கள் கானம் பண்ணிய எம்பெருமானின் திருநாமங்களைத் தொகுத்துக் கூறியிருப்பதால் இந்த ஸஹஸ்ர நாமம் ஏற்றுக் கொள்ளத் தக்கது.

4 பீஷ்மர் தம்முடைய திருவுள்ளத்தால் சிறந்த தென்று ஒப்புக் கொண்டது.—

வேதவ்யாசர் தர்மபுத்ரரை நோக்கித் தர்மங்கள் அனைத்தையும் கேட்க உனக்கு விருப்பமாயின் குரு விருத்த பிதாமஹரும் பெரியவருமான பீஷ்மரிடத்தில் சென்றால் ஸகல ஸூக்ஷ்ம விஷயங்களிலும் உனக்குள்ள ஸந்தேஹங்களை அவர் நீக்கி விடுவார். அவர் இந்திராதி தேவர்களை நேராகக் கண்டவர் என்று கூறியுள்ளார் ஸ்ரீ கிருஷ்ணனும் கூட ''பீஷ்மர் தற்போது சரதல்பத்தில் படுத்து அக்கினி ஆறுவதுபோல் அந்திம தசையில் இருக்கிறார். புருஷர்களிற் சிறந்தவரான அவர் என்னை த்யானம் செய்து கொண்டிருக்கிறார். அதனால் என்னுடைய மனமும் அவரை அடைந்துள்ளது. மஹாதேஜஸ்வியும் புத்திமானுமான அவர் அஸ்த்ரங்களையும் நான்கு வேதங்களையும் வேதாங்கங்களையும் மனதிற் கொண்டிருப்பவர். அவரை நான் இப்போது மனதால் அடைந்துள்ளேன் அவர் எதிர், நிகழ் கழி காலங்களை அறிந்திருப்பவர், குருவம்சத்தின் தலைவரான அந்த பீஷ்மர் அஸ்தமித்துவிட்டால் ஜ்ஞானங்கள் குறைந்து போய்விடும். ஆகவே அவரிடமிருந்து அர்த்தங்களைத் தெரிந்து கொள்ள உங்களைத் தூண்டுகிறேன்'' என்று தர்மபுத்ரரிடம் கூறியுள்ளார். அந்த நியமனத்தின்படி தர்மபுத்ரர் உள்ளிட்ட அனைவரும் பீஷ்மரிடம் சென்று அர்த்தங்களையெல்லாம் கேட்கின்றனர். (தொடரும்)